Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 199

திங்கட்கிழமை
13 ஜூன் 2022

வைகாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50



# கழுத்தை இறுக்குகிறது எரிபொருள் நெருக்கடி

## பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்க முடிவு

**கொழும்பு, ஜூன் 13**

**நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோரை பதிவு செய்து அவர்களுக்கு வாராந்தம் பங்கீட்டு அடிப்படையில் எரிபொருள் வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

(விரிவு - பக்:5)

## எரிபொருள் விலை ஜூன் 24 அதிகரிப்பு

*அமைச்சின் செயலர் தகவல்*

கொழும்பு, ஜூன் 13

எரிபொருளுக்கான விலைச் சூத்திரத்துக்கு அமைவாக எதிர்வரும் ஜூன் 24ஆம் திகதி எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி

15

## புதிய கட்டளைத்தளபதி யாழில் பொறுப்பேற்பு



யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். மாவட்ட 28 ஆவது கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்ததன விஜய சுந்தர நேற்று ஞாயிற்

15

பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குச் சென்றவர்

## வீதியில் வைத்து வெட்டிக் கொலை!

*மல்லாவியில் சோகம்*

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு - மல்லாவி -பாலிநகர் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் நடுவீதியில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் நேற்றுக் காலை வீதியிலிருந்து மீட்கப் பட்டுள்ளது.

15

## வவுனியாவில் நாட்டாமை அடித்துக் கொலை

*சந்தேகத்தில் ஒருவர் கைது*

வவுனியா, ஜூன் 13

வவுனியா நகரப் பகுதியில் நாட்டாமை ஒருவர் சடலமாக நேற்றுமுன் தினம் இரவு மீட்கப்பட்டுள்ளார். முத்து (வயது - 40) என்பவரே இவ்வாறு

15

## வாழைத்தோட்டத்தில் இளைஞனின் சடலம்!

*உரும்பிராயில் நேற்று மீட்பு*

*போதை ஊசி பயன்படுத்தினாரென பொலிஸார் சந்தேகம்*

யாழ்ப்பாணம், ஜூன் 13

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் சிவன் வீதியில் அமைந்துள்ள வாழைத் தோட்டத்துக்குள்ளிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது. இணுவில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த தங்கராசா திலீபன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

மக்களின் எதிர்ப்பால்

# குருந்தூரில் புத்தர் சிலை நிறுவுதல் இடைநிறுத்தம்!

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் புதிதாக விகாரை அமைக்கப்பட்டு அங்கு புத்தர் சிலை வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி மக்கள் எதிர்ப்பு போராட்டத்தால் நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

குருந்தூர்மலை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. விசாரணைக்கு அமைவாக, குருந்தூர்மலையில் எவ்வித மதக்கட்டுமானங்களும் மேற்

15



## கைவிடப்பட்ட காணிகளை சுவீகரிக்க அரசு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 13

நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள விவசாயத்துக்கு ஏற்ற காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

15

பருத்தித்துறையில் நேற்று அதிகாலை

## வாள்முனையில் கொள்ளை: 3 பேர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் வாள்கள் கத்திகளுடன் வீடொன்றினுள் நுழைந்த 6பேர் கொண்ட முகமூடிக் கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தவர்கள் மீது வாளால் வெட்டித் தாக்குதலை மேற்கொண்டு விட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது. கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான 2 ஆண்கள் மற்றும் பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

15

# பேரழிவின் விளிம்பில் இலங்கை ‘குவாட்’ அமைப்பு உதவவேண்டும்

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுத் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

இலங்கை மனிதாபிமானப் பேரழிவின் விளிம்பில் உள்ளது. எனவே அமெரிக்கா, இந்தியா, ஜ

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கையின் கடன் கோரிக்கை நிராகரித்தது சீன அரசாங்கம்!

## நிபந்தனைகளைப் பின்பற்றாமையே காரணம்



**கொழும்பு, ஜூன் 13**

**இலங்கை தனது நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது என்ற அடிப்படையில் இலங்கையின் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் பரிமாற்ற ஏற்பாட்டை சீன அரசாங்கம் நிராகரித்துள்ளது.**

சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹோன, சீனாவின் ஆசிய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் லியு ஜின்சோங்கை பீஜிங்கில் சந்தித்தபோதே இந்த நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக சீன நிதி நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. அதேநேரம் அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் உட்பட உள் மற்றும் வெளிக் காரணிகளால் சீனாவும் பொருளாதார மந்தநிலை மற்றும் பணப் புழக்கப் பிரச்சினையை எதிர்கொள்கின்றது. ஆயினும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிக்கான இலங்கையின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

சீனா சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு மையத்தின் அவசர மனிதாபிமான உதவியாக இலங்கைக்கு முன்னர் 500 மில்லியன் ரிங்கிட் சீனா அளித்துள்ளது. அத்துடன், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் பிற தொண்டு நிறுவனங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட உதவிகளும் இலங்கைக்கு அனுப்பப்பட்டன.

இதேவேளை, இலங்கையின் வெளிவிவகார திணைக்களத்தின் ஊடாக முறையான கோரிக்கை விடுக்கப்பட்டால், டீசல் மற்றும் உரங்களை வழங்குவது குறித்து சீனா பரிசீலிக்க முடியும் என சீனாவின் ஆசிய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர், இலங்கையின் சீனத் தூதுவர் பாலித கொஹோனவுக்குத் தெரிவித்தார்- என்றுள்ளது. (ச-இ)

# மத்திய வங்கி ஆளுநர் விவகாரத்தில் இழுபறி?

கொழும்பு, ஜூன் 13

மத்திய வங்கியின் ஆளுநராக தினேஷ் வீரக்கொடியை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பதவிக்காலம் இந்தமாத இறுதியில் நிறைவடையவுள்ளது. அதையடுத்தே பிரதமர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்று தெரிகின்றது.

நந்தலால் வீரசிங்கவுக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்து மோதல் உருவாகியுள்ளது என்று கூறப்படும் நிலையில், இலங்கை மத்திய வங்கி அந்தத் தகவலை நிராகரித்துள்ளது. ஆயினும் பிரதமரின் கோரிக்கைக்கு ஜனாதிபதி இதுவரை சாதகமான பதிலை வழங்கவில்லை. அதேநேரம் அமைச்சு நிகழ்ச்சி நிரல் வர்த்தமானியில் வெளியிடும்போது இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சகத்தின் கீழ் பதிவிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. தினேஷ் வீரக்கொடி பிரதமரின் பொருளாதார ஆலோசகராகவும், வங்கிகளின் முன்னாள் தலைவராகவும் இருந்துள்ளார். (எ-இ)

# வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## திணைக்கள செயற்பாடுகளும் ஸ்தம்பிதம்



கொழும்பு, ஜூன் 13

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நாட்டைவிட்டு வெளியேறும் இளையோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது எனக் குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அதனால் குடிவரவு குடியகல்வு திணைக்களச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு வரும் இளைஞர்களால் திணைக்களம் நிரம்பி வழிகிறது.

பல நாள்களாக நீண்டவரிசையில் இளையோர் காத்திருக்கின்றனர். அத்துடன் மின்சாரம் தடைப்படும் போது கடவுச்சீட்டு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும் வேளை முரண்பாடுகளும் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வெள்ளிக்கிழமை விடுமுறை அடுத்தவாரம் நடைமுறை

கொழும்பு, ஜூன் 13

அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கும் வேலைத்திட்டத்தை அடுத்த வாரம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்று தெரியவருகின்றது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட எரிசக்தி நெருக்கடிக்குத் தீர்வாக இந்தத் திட்டம் ஆலோசிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரத்தில் இருந்து இதை நடைமுறைப்படுத்த முடியும் என்று நம்புகிறோம். தற்போது, எரிபொருள் விலையேற்றத்தால் வேலைக்குச் செல்வதற்கும், திரும்புவதற்கும் பெரும் கூடுதல் செலவு ஏற்படுவதை அரச ஊழியர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அவர்கள் வசிக்கும் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட விரும்பினால், அவர்கள் பொது நிர்வாக அமைச்சின் உதவி மற்றும் பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்படும்- என்றார். (எ-இ)

# பாடசாலை நாள்களை குறைக்கும் திட்டமில்லை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

பாடசாலை நாள்களைக் குறைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டாலும் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை சிறந்தளவில் உள்ளது. இதனால் பாடசாலை நாள்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை- என்றார்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைப்பதற்கு, அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் கல்வி அமைச்சிடம் யோசனை ஒன்றை முன்வைத்திருந்தது. (எ-14, இ)

# பாடசாலைப் பொருள்களின் விலைகளும் இருமடங்கு!

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் நிலவும் காகிதத் தட்டுப்பாட்டால் பயிற்சிக் கொப்பிகள், பாடசாலைப் பைகள், காலணிகள் ஆகிய பாடசாலை உபகரணங்களின் விலைகள் இருமடங்காக உயர்ந்துள்ளன.

50 ரூபாவாக இருந்த 80 பக்க கொப்பியின் விலை தற்போது 110 ரூபாவாகவும், 70 ரூபாவாக இருந்த 120 பக்க கொப்பியின் விலை 130 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன. இந்தப் பயிற்சிக் கொப்பிகளின் விலை கொப்பிகளின் வகையைப் பொறுத்து மாறுபடும் எனவும் சில கொப்பிகளின் விலை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்றும் பாடசாலை எழுதுபொருள் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பல வகையான பயிற்சிக் கொப்பிகள் தங்களிடம் விற்பனைக்கு இல்லை என்றும் புதிதாக முன்பதிவு செய்யப்பட்டும் இன்னும் அவை கிடைக்கவில்லை என்றும் விற்பனை நிலையங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரூ.3 முதல் 5 ரூபாவரை இருந்த போட்டோ பிரதிகளை பெறுவதற்கான கட்டணம் தற்போது ரூ.12 முதல் 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (ச-இ)

# நெல் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் ஒரு கிலோகிராம் நெல் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையில், மக்கள் நெல்லை சேமித்து வைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதையடுத்து நெல்லின் விலை அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

மாவட்டங்களிலுள்ள விவசாயிகளிடம் ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் தனிப்பட்ட ரீதியில் நெல்கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளமையும், நெல்லுக்கான கேள்வியை அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ய)

# புதிய அரசியல் கூட்டணிக்கு திரைமறைவில் பேச்சுக்கள்!

கொழும்பு, ஜூன் 13

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சிலர் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்காக தற்போது திரைமறைவில் பேச்சை நடத்துகின்றனர் என்று அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு அணி, ஐக்கிய மக்கள் சக்தியின் சிலர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தற்போது அரசாங்கத்தில் இருந்து விலகி இருக்கும் சிலர் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

சுசில் பிரேமஜயந்த, அனுரபிரியதர்ஷன யாப்பா, மஹிந்த அமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, சரித ஹேரத், ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார உள்ளிட்டோர் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

புதிய கூட்டணியின் தலைவர் பதவிக்கு 5 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, இந்தக் கூட்டணியை உருவாக்கப்படுவது தொடர்பாகச் சிலர் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடன்களை வாரி வழங்கும் இந்தியா!

## 3 மாதத்தில் சுமார் 600 கோடி டொலர் உதவி

**கொழும்பு, ஜூன் 13**

**இந்தியா கடந்த மூன்று மாத காலத்தில் இலங்கையின் பல்வேறு தேவைகளுக்காக சுமார் 600 கோடி டொலர் ( 6 பில்லியன்) நிவாரணக் கடனை வழங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.**

இதில் அதிகளவான தொகை இலங்கைக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய தொகை இலங்கைக்கு தேவையான அத்தியாவசிய உணவு, மருந்து, சமையல் எரிவாயு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர பல ஆசிய நாடுகளுக்கு இலங்கைக்குச் செலுத்த வேண்டிய கூட்டுக் கடனை செலுத்துவதையும் இந்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. இதனடிப்படையில் இந்தியா, கடந்த மூன்று மாத காலத்தில் இலங்கைக்கு சுமார் 600 கோடி டொலரைக் கடனாக வழங்கியுள்ளது. அதேநேரம், கமத்தெழிலுக்குத் தேவையான உரத்தைக் கொள்வனவு செய்யவும் இந்தியா 55 மில்லியன் டொலரைக் கடனாக வழங்கவுள்ளது. அது தொடர்பான உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்தநிலையில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசு இந்தியாவிடம் இருந்து மேலும் 500 மில்லியன் டொலரைக் கடனாகப் பெற எதிர்பார்த்துள்ளது. (எ-இ)



# மீள தலைதூக்கவுள்ள எரிபொருள் நெருக்கடி

கொழும்பு, ஜூன் 13

இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டு வந்த எரிபொருளில், கடைசி எரிபொருள் தாங்கிய டீசல் கப்பல் இந்தமாதம் 16ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

அதன்பின்னர் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் முறை தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிடம் இருந்து மேலும் 500 மில்லியன் டொலர் எரிபொருள் உதவி பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை இந்தியாவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதேநேரம், நாட்டில் எரிபொருள் நெருக்கடி நாளை முதல் மோசமடையலாம் என்று பெற்றோலிய தொழிற்சங்கங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளன.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் புள்ளிவிவரங்களின்படி இன்னும் நான்கு நாள்களுக்கு மட்டுமே நாட்டில் டீசல் கிடைக்கும் எனப் பெற்றோலிய தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு முற்பணம் செலுத்தவேண்டும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது என்று பெற்றோலிய தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முற்பணம் செலுத்தி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமோ? என்பது இனிமேல்தான் தெரிய வரும் என்று தெரிவித்துள்ள அந்தச் சங்கம், எதிர்வரும் புதன்கிழமைக்குப் பின்னர் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல்கள் உருவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. பெற்றோல், டீசல் பற்றாக்குறை சிக்கலின் காரணமாகவே இன்று 13ஆம் திகதி அரச நிறுவனங்கள், பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# ஐ.எம்.எவ். கடன் உதவி உடனடியாகக் கிடையாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஒக்ரோபர் மாதம் வரை இலங்கைக்குக் கடன் கிடைக்கவாய்ப்பில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஏனைய நட்பு நாடுகளிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியானது தவறான நிர்வாகம், வரி குறைப்பு மற்றும் உரப்பிரச்சினை போன்றவற்றின் காரணமாக ஏற்பட்டது. அதேநேரம், கொரோனாத் தொற்று மற்றும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக இந்த நிலைமை மிக மோசமடைந்துள்ளது - என்றார். (எ-இ)

# பயண ஆலோசனையை தளர்த்திய பிரித்தானியா

கொழும்பு, ஜூன் 13

இலங்கைக்கு வரும் தமது நாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பயண ஆலோசனையைப் பிரிட்டன் தளர்த்தியுள்ளது. பிரிட்டனின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறையுடன் இலங்கையின் பொருளாதார நிலைமை சவாலாக உள்ளது.

கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றில் நீண்ட வரிசைகள் இருக்கக்கூடும்.

வாடகை வாகனங்கள் மற்றும் பிற பொதுப்போக்குவரத்தைப் பெறுவதில் சிரமங்கள் அல்லது தாமதங்கள் இருக்கலாம். அத்துடன் நாளாந்த மின்துண்டிப்பு ஏற்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து போராட்டங்கள் இடம்பெற்று பல வன்முறைச் சம்பவங்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. மேலும் போராட்டங்கள் நடத்தப்பட வாய்ப்புள்ளது. இதனால் இலங்கை அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட உள்ளூர் கட்டுப்பாடுகளை குறுகிய அறிவிப்பில் விதிக்கலாம்.

எனவே, இலங்கையில் உள்ள பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பதுடன், எந்தவொரு ஆர்ப்பாட்டங்கள் அல்லது பொது கூட்டங்களைத் தவிர்த்து உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையையும் பின்பற்றுங்கள்- என்றுள்ளது. (எ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தம்மிக்க பெரேராவை அமைச்சராக்கிற விசயத்தால, மொட்டுக் கட்சிக்குள்ள திரும்பவும் புகைச்சல் கிளம்பியிருக்காம். பஸில் தம்மிக்கவை உள்ளுக்க கொண்டு வாறதை பெரிசா விரும்பேலை. அவர் வேற ஒராளைத்தான் தனக்குப் பதிலாக கொண்டுவர நினைச்சவராம். பதவி விலகேக்க தனக்குப் பிடிச்ச அந்த ஆளின்ர பேரைச் சொல்லி, 'அவரை எம்.பி. ஆக்குங்கோ'எண்டு கோத்தாவிட்ட கெஞ்சாத குறையாச் சொல்லிப்போட்டு வந்தும், தம்மிக்கவின்ர பேரைத்தான் கோத்தா தேர்தல் ஆணைக்குழுவிட்ட குடுத்திருக்கிறார். இதைக் கேள்விப்பட்டவுடன பஸிலுக்கு கடும் அப்செட்டாம்.**

**'இப்பிடி அவர் (கோத்தா) நினைச்சதைத்தான் செய்வார் எண்டால் எதுக்கு நான் கஷ்டப்பட்டு காப்பாத்த வேணும். இனிமேல் மற்றவைக்காக உழைச்சது காணும். இனி எனக்காக உழைக்கப் போறன். அடுத்த எலக்சனில நான் நிக்கிறன் ஜனாதிபதித் தேர்தலில' எண்டு தனக்கு நெருக்கமான ஆக்களுக்குச் சொல்லி இருக்கிறார். அதோட கோத்தாவும், ரணிலும் கூட்டா கொண்டுவர நினைக்கிற 21 ஆம் திருத்தத்தை எதிர்த்து வாக்களிக்கச் சொல்லி பஸில் பெரமுனக்காரர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறாராம். அதாலதான் இவ்வளவு நாளும் 21 க்கு ஆதரவு குடுப்பம் எண்டமாதிரிக் கதைச்ச பெரமுன எம்.பி.க்கள் இப்ப ' 21 ஐ எதிர்த்துத்தான் வாக்களிப்பம்' எண்டு பப்ளிக்கா சொல்லத் தொடங்கிட்டினம். இந்தத் திட்டத்துக்கு மஹிந்தவின்ர ஆதரவும் இருக்காம். ஆனால் என்னசெய்தாலும், அண்ணன்மார் மட்டுமில்லை இந்த உலகமே எதிர்த்தாலும் எப்பிடியும் 21 ஆம் திருத்தத்தைக் கொண்டு வாறதிலதான் கோத்தா தீவிரமா இருக்கிறாராம். ஏனெண்டால், எப்பிடியாவது 21 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்திட்டால்,கட்டாயம் உலக வங்கியோ இல்லாட்டி சர்வதேச நாணய நிதியமோ ஓடி வந்து டொலரைக் குடுக்கும். அதைவைச்சு ஓரளவுக்கு நிலைமையை சுமுகமாக்கினால், இன்னும் ஒரு மூண்டு வருசம் பெரிய கரைச்சல் இல்லாமல் ஜனாதிபதி எண்ட பதவியில கோத்தா ஒட்டிக்கொண்டிருக்க முடியும். பிறகு, காலம் முடிய பின்பக்கத்தை தட்டிக்கொண்டு அமெரிக்காவுக்குப் பறக்கலாம். ஆனால் இடையில மட்டும் பதவியை விட்டிட்டுப் போகமாட்டன் எண்டு கோத்தா அடம்பிடிக்கிறார். ஏனெண்டால் , தான் தோத்திட்டன் எண்டதை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. தன்னால் இன்னும் நாட்டை நிமிர்த்த ஏலும் எண்டு அவர் நம்பிறார். அதாலதான் இப்ப சனங்களின்ர ஆர்ப்பாட்டங்கள் கொஞ்சம் குறைஞ்சிருக்கிற இந்த நேரத்தில தம்மிக்க பெரேரா மாதிரி வர்த்தகரை அரசாங்கத்துக்குள்ள கொண்டு வந்து, அவரின்ர செல்வாக்கைப் பாவிச்சு வெளிநாட்டு முதலீடுகளையும், டொலரையும் கொண்டுவரலாம் எண்டு கோத்தா நினைக்கிறார். அதாலதான் அண்ணன் பஸிலின்ர சொல்லையும் கேக்காமல், இப்பிடி ஒரு முடிவை எடுத்தவராம்.**

**தம்மிக்கவை அமைச்சராக்கப் போறன் எண்டு இதுவரைக்கும், ரணிலுக்கும் கோத்தா சொல்லேலையாம். இதால ரணிலும் கோத்தாவில கடும் கோபத்தில இருக்கிறாராம். ஆருக்கெல்லாம் அமைச்சர் பதவி குடுக்க வேணும், ஆருக்கு குடுக்கக் கூடாது, எத்தினை அமைச்சர்மார் இருக்கவேணும், என்னென்ன துறைக்கு இப்ப அமைச்சர்கள் தேவை எண்டெல்லாம் கோத்தாவுக்கு ரணில் ஒரு பெரிய லிஸ்ட் குடுத்து, அதுக்கு கோத்தா ஓமெண்ட பிறகுதான் பிரதமராக ரணில் பதவியேற்றவர். இப்ப என்னெண்டால், காதும் காதும் வைச்சமாதிரி, ரணிலுக்கும் சொல்லாமல், அண்ணன்மாரின்ர முடிவையும் மதிக்காமல், தம்மிக்கவை அமைச்சராக்க கோத்தா கடும்மையா ஓடித்திரியிறாராம். முதல் முறையா கோத்தா ஒரு சொந்த முடிவை தானேயோசிச்சு எடுத்திருக்கிறார். பாப்பம், அது பலன் குடுக்குதா? இல்லாட்டா கோத்தாவின்ர பதவியைப் பறிக்குதா? எண்டு கொஞ்ச நாளில முடிவு தெரிஞ்சிடும்.**



- பட்சி

# ஜூலைக்குள் '21' வராவிடில் பெரும் அரசியல் நெருக்கடி

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 13**

**அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தச் சட்டம் ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றப்படாவிட்டால், அரசியல் நெருக்கடி மேலும் தலைதூக்கும் என்று 43 ஆம் படையணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

21ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கப் பிரமுகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும், சட்டவாக்க சபைக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் விதத்திலேயே 21 முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, அது தொடர்பாக அச்சம் கொள்ளவேண்டியதில்லை. இந்தச் சட்ட வரைவு விரைவில் அமைச்சரவையில் இறுதிப்படுத்தப்பட்டு, ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றப்படவேண்டும். தாமதித்தால், அரசியல் நெருக்கடி தலைதூக்கும், அது பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தும். சர்வதேச விவகாரங்களிலும் சிக்கல் வரலாம் - என்றார். (எ-44)

# வெளியேற்றப்படுவார் என உணர்ந்தே முன்னரே பதவியைத் துறந்தார் பஸில்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச 21ஆவது திருத்தம் ஊடாக வெளியேற்றப்படுவதற்கு முன்னர் கௌரவமான முறையில் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முழுமையாக இரத்துச் செய்ய அவதானம் செலுத்த வேண்டும். மாகாணசபை முறைமை, தேர்தல் முறைமை குறித்து முரண்பாடற்ற தீர்மானத்தை மேற்கொண்டதன் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வது தொடர்பாக விசேட அவதானம் செலுத்த வேண்டும். அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களில் பெரும்பாலான அதிகாரங்கள் நாடாளுமன்றுக்கு வழங்கப்படவேண்டும். அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமையுடைய நபர் அரசியலில் செல்வாக்குச் செலுத்த தகுதியற்றவர் என்ற ஏற்பாடு உள்வாங்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

திருத்தத்தை இரத்துச் செய்ய பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததை தொடர்ந்தே அவர் 21ஆவது திருத்தம் ஊடாக வெளியேற்றப்படுவதற்கு முன்னர் கௌரவமான முறையில் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்துள்ளார் - என்றார். (ச-இ)

# எந்தத் தேர்தலுக்கும் பெரமுன தயாராம்



கொழும்பு, ஜூன் 13

எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அதை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயார் என்று பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ச பதவி விலகியமை தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியை நாட்டு மக்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால், கடந்த இரண்டு வருட காலமாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோதும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு சிலர் பலவீனப்படுத்தும் வகையில் செயற்பட்டதால் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தது.

தற்போதைய அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினோம். எனினும் அதற்கு முறையான தீர்வை அவர்கள் முன்வைக்கவில்லை. மேலும் ஒரு தனி நபரை இலக்காகக் கொண்டு மட்டுமே 21 ஆவது திருத்தச் சட்டவரைவு உருவாக்கப்பட்டது. இதற்கு எதிராகவே பெரமுன வாக்களிக்கும் - என்றார். (எ-14,இ)

# தம்மிக்க பெரேராவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 13

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தொழிலதிபர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் சிவில் செயற்பாட்டாளர் சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தம்மிக்க பெரேராவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமை மக்களின் இறைமைக்கு பெரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவின் பதவி விலகலையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே தொழிலதிபர் தம்மிக்க பெரேரா நிமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை - விரைவில் அவர் முக்கியமான அமைச்சுப் பதவியையும் பெற்றுக்கொள்ளவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன - என்றார். (எ-14,இ)

# விடுதிக்கு அழைத்து போதையேற்றி பெருந்தொகை நகைகள் 'அபேஸ்'

ஒருவருக்கு மதுபானத்தை அருந்தக் கொடுத்து 2.7 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளை பெண் ஒருவர் திருடிச் சென்றுள்ளார். அந்தப் பெண் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஏமாற்றப்பட்டவர் 40 வயதுடையவர் என்றும், அவர் கொரியாவில் பணிபுரிந்து விட்டு மூன்று நாள்களின் முன்னரே நாடு திரும்பியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பேஸ்புக் ஊடாகப் பழக்கமான இந்தப் பெண் திஸ்ஸமஹாராமவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு நபரை அழைத்து ஏமாற்றி நகைகளைத் திருடிக் கொண்டு தப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ய)

# மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளவில்லை அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எதிர்க்கட்சிகள் கைகொடுத்தும் அதற்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

புதிய அமைச்சரவையில் முன்னாள் அமைச்சர்களை அரசாங்கம் மறுசுழற்சி செய்கின்றது என்றும், மக்களின் குறைகளுக்கு தீர்வுகளை வழங்கத் தவறிவிட்டது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டபோதும் எரிவாயு தட்டுப்பாடு தொடர்கின்றது. அதேவேளை எரிபொருளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் திறமையற்றது என்பதற்குச் சான்றாக நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள் இன்னும் காணப்படுகின்றன - என்றார். (ம)

# யோஷிதவின் சொத்து 3 ஆயிரத்து 400 கோடி ரூபா

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 13

மஹிந்த ராஜபக்சவின் மகனான யோஷித ராஜபக்சவின் சொத்து 3 ஆயிரத்து 400 கோடி ரூபா என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையை அடுத்து யோஷித ராஜபக்ச, அன்று அதிகாலை சிங்கப்பூர் ஊடாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கிருந்து பெர்த் நகருக்குச் சென்றார். கடந்த மே மாதம் 25 ஆம் திகதி நாடு திரும்பிய யோஷித காணிப் பிரச்சினை ஒன்று தொடர்பில் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

யோஷித, தனது முன்னாள் காதலி யஸாரா அபேநாயக்கவுடன் காணி ஒன்றை 8 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்திருந்தார். பின்னர் அந்தக் காணியில் இருந்த வீட்டில் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரை பாதுகாப்புக்காகத் தங்க வைத்தார்.


இந்த நிலையில் நாட்டுக்கு வந்த யோஷித, இரண்டு வாகனங்களில் அடியாள்களுடன் அந்த வீட்டுக்குச் சென்று இராணுவ அதிகாரியையும் மகனையும் வெளியேற்றுவதற்கு முயற்சித்துள்ளார். எனினும் முன்னாள் இராணுவ அதிகாரி அதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளார். 8 வருடங்கள் தொடர்ந்து இந்த வீட்டில் இருந்தமையால் அது எங்களுக்கே சொந்தமாகிவிடும். முடியும் என்றால் எங்களைச் சுட்டுக்கொல்லுங்கள் எனக் கத்தி கூச்சலிட்டுள்ளார்.

இதனால் சத்தம் கேட்டு அயலவர்கள் வெளியே வந்தவுடன், யோஷித உட்பட அவரது குழுவினர் அங்கிருந்து சென்றனர் என்றுள்ளது. (எ-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் விவரம் பதிந்து இனி எரிபொருள் வழங்கல்

## எரிசக்தி அமைச்சர் தகவல்



கொழும்பு, ஜூன் 13

**எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோர் தங்களது விவரங்களைப் பதிவு செய்து, அதனூடாக வாராந்தம் உத்தரவாத அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கும் முறைமையொன்று உருவாக்கப்படவுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**

இலங்கையின் நிதி நிலைமையை வலுப்படுத்தவும், 24 மணி நேர தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்குதல் மற்றும் நிலையான எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை இதனூடாக சீர்செய்ய முடியும் என்று நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது டுவிற்றர் பக்கத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜூலை முதலாவது வாரத்தில் இந்தக் கட்டமைப்பு நடைமுறைக்கு வரும் என்றும் எரிசக்தி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் தடையற்ற மின்சாரம் மற்றும் நிலையான எரிபொருள் விநியோகம் இருக்கும்வரை, எரிபொருள் பாதை முகாமைத்துவம் சாத்தியமற்றதாக இருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-இ)



# எரிவாயு இல்லை: மக்கள் முரண்பாடு

மன்னார், ஜூன் 13

மன்னார், உப்புக்குளம் பகுதியிலுள்ள லிட்ரோ எரிவாயு விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூடியிருந்த மக்கள், எரிவாயு விநியோகிக்கப்படாமையால் முரண்பட்டுள்ளனர். அதனால் அங்கு பதற்றமான சூழல் காணப்பட்டது.

அந்த லிட்ரோ எரிவாயு விற்பனை நிலையத்துக்கு முன் கடந்த 10 நாள்களுக்கு மேலாக பலர் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள சிலிண்டர்களை அடுக்கி வைத்துக் காத்திருந்தனர்.

ஆயினும் 10 நாள்களைக் கடந்தும் அந்த முகவர் நிலையத்துக்கு எரிவாயு கிடைக்காத நிலையில் சிலிண்டர்களை தூக்கியெறிந்து உரிமையாளர்களுடன் மக்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அத்துடன் எரிவாயு விற்பனை நிலைய முகவருக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர். (ச-56)



# நாட்டு மக்கள் நலன் சார்ந்தே முடிவுகள் எட்டப்படவேண்டும்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

மக்களுக்கு நன்மை பயக்காத எந்தவொரு முடிவும் நாட்டுக்குப் பயனளிக்காது. நாட்டைக் கட்டியெழுப்புவது நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டே தீர்மானிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள், துறைமுகங்கள் மற்றும் ஏற்றுமதி போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் குழுவினருடன் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்கு நன்மைபயக்காத வண்ணம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முடிவும் நாட்டுக்கு பயனளிக்காது. நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது நாட்டின் நலன்களைக் கருத்திற் கொண்டே தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர, அரசியல்வாதிகளின் நலன்களுக்காக அல்ல.

நாட்டு மக்களுக்கு துரோகம் செய்யும் முடிவுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் எடுக்காது.

எமது சகல முடிவுகளும் நாட்டுக்கு கிடைக்கும் நலன்கள் மற்றும் நாட்டுக்கு கிடைக்கும் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும்- என்றார். (ச-இ)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்படாததால் இழப்பு!

## நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை செயற்படாதுள்ளதால் நாடு மிகப் பெரும் இழப்பை எதிர்நோக்கியுள்ளது என வலுசக்தி துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் தற்போதைய நெருக்கடி நிலை மேலும் தீவிரமடையும் என வலுசக்தி துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்தின் விலை 100 ரூபாவை அண்மித்துள்ளதுடன் நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்தின் விலை 50 ரூபாவாகக் காணப்படுகின்றது என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ய)

# மீண்டும் களனிவெளி ரயில் சேவை

கொழும்பு, ஜூன் 13

களனிவெளி ரயிலில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்காக ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை புதிய ரயிலொன்று சேவையில் ஈடுபடவுள்ளது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 15ஆம் திகதி முதல் ரயில் சேவையில் ஈடுபடும்.

இடைநிறுத்தப்பட்ட களனிவெளி மின்சார ரயில் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மின்சார ரயில்களை இயக்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே தமது நோக்கமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ய)

# மஹிந்தவுக்கு எதிரான மனு ஜூலை மாதம் விசாரணை

கொழும்பு, ஜூன் 13

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு காரணமானவர்கள் என்று குற்றஞ்சாட்டி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான புவனேக அலுவிகாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி. தெஹிதெனிய ஆகிய நீதியரசர்கள் அடங்கிய ஐவர் கொண்ட குழாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

கலாநிதி மஹீம் மெண்டிஸ் உள்ளிட்ட திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மூவர் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான உத்தரவை நீதியரசர்கள் பிறப்பித்தனர்.



இந்த மனுவில் பிரதிவாதிகளாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சரவை, தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், கலாநிதி டபிள்யு டி. லக்ஷ்மன் மற்றும் மத்திய வங்கியின் நிதி சபை, ஜனாதிபதியின் முன்னாள் செயலர் பி.பி.ஜயசுந்தர, கணக்காளர் நாயகம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் அதன் ஆணையாளர்கள் சட்டமா அதிபர் உள்ளிட்ட 39 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செப்ரெம்பர் அமர்வில் இலங்கைக்கு அழுத்தம் வரும்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 13**

**தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகவோ, மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகவோ அரசாங்கம் உள்ளடங்கலாக எந்தவொரு தரப்பினரும் அவதானம் செலுத்தாமல் இருப்பது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை மீது வலுவான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த சிவில் சமூகப்பிரதிநிதிகள் தற்போது போராட்டங்களில் ஈடுபட்டு வருவோருக்கு இலகுவில் தண்டனை வழங்கப்படுகின்றது என்றும், இருப்பினும் ஏனையோருக்கும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்போருக்குமான தண்டனை வழங்கல் தாமதப்படுத்தப்படுகின்றது என்றும் எடுத்துரைத்தனர்.

ஆயினும் அமெரிக்கத் தூதுவர் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் மிகத் தீவிரமாக இயங்குகின்றபோதும், அதில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவானதாகவே இருக்கின்றது என்று அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்த சிவில் சமூகப்பிரதிநிதிகள், அந்தத் திருத்தத்தின் மூலம் தமக்கு எவ்வித நன்மைகளும் கிட்டாது என்பதுடன் தமது எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படாது என்று அவர்கள் கருதுவதே அதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்றும் சுட்டிக்காட்டினர். அத்துடன் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த இராணுவப் பிரசன்னம், தொல்பொருள் சின்னங்கள் சிதைக்கப்படல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இன்னமும் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை என்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

அங்கு கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், 'தற்போதைய நெருக்கடிகளுக்கு மத்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்தோ, மனித உரிமைகள் நிலைவரம் குறித்தோ எந்தவொரு தரப்பினரும் பேசுவதில்லை. இது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது இலங்கை மீது பெரும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம். ஏனெனில் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பிலேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அவதானம் செலுத்தும்- என்று தெரிவித்துள்ளார். (எ-இ)



(கோப்புப்படம்)

# கடலில் விடப்பட்ட ஆமைக்குஞ்சுகள்

கொழும்பு, ஜூன் 13

கரையோரக் காவற்படையின் கடலாமை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நாட்டின் பல இடங்களில் 134 கடலாமைக்குஞ்சுகள் அண்மையில் கடலில் விடப்பட்டன என்று இலங்கை கரையோரக் காவற்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கடலாமைக் குஞ்சுகள் அவற்றின் இயற்கைச் சூழலுக்கு விடுவிக்கப்பட்டதை பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் கண்டுகளித்தனர்.

கரையோரக் காவற்படையானது கடலாமை முட்டைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவற்றின் இயற்கைச் சூழல் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 9 ஆயிரத்து 368 கடலாமை குஞ்சுகள் கடலுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் 6 ஆயிரத்து 530 ஆமை முட்டைகள் அடைகாக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# ரணிலுக்கு தெரிவிக்காது தம்மிக்கவின் நியமனம்?

## ஐ.தே.க.வினரிடையே குழப்பம்

கொழும்பு, ஜூன் 13

வர்த்தகர் தம்மிக்க பெரேராவை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்கின்றமை மற்றும் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுமக்கள் பலமில்லாத நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தாமே நியமித்ததை கருத்திற்கொண்டு, தம்மிக்க பெரேராவின் நியமனம் தொடர்பில் கோத்தாபய, ரணிலுடன் கலந்தாலோசிக்கவில்லை என்றே கருதப்படுகின்றது எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் தம்மிக்கவுக்கு அமைச்சுப் பதவியை வழங்கும் யோசனை தொடர்பிலும், கோத்தாபய, ரணிலுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

தம்மிக்கவுக்கு முதலீட்டு ஊக்குவிப்புத் துறையை வழங்குவதன் மூலம், நிதியமைச்சராக இருக்கும் ரணிலின் அதிகாரத்தைக் குறைக்க, பஸிலும் கோத்தாபயராஜபக்சவும் முனைகிறார்களா? என்ற சந்தேகத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி தரப்பினர் எழுப்பியுள்ளனர்.

இந்த நியமனம், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்தினால், அது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென்பதை சர்வதேசத்துக்கும் வழங்கக் கூடும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

# அமெரிக்காவின் தேவைக்காக செயற்படுகின்றார் பிரதமர்

## திஸ்ஸ எம்.பி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 13

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதும் அமெரிக்காவின் தேவைக்காகச் செயற்படுகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு பேச்சு நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக ஜனாதிபதி நியமித்தார். இருப்பினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில்செயற்பட்டதைப்போன்று தற்போதும் அமெரிக்காவின் தேவைக்கமைய செயற்படுகின்றார். தற்போதைய அரசாங்கம் பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்றதே தவிர நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வை முன்வைக்கவில்லை- என்றார். (எ-14)

# எதிர்வரும் வாரங்களில் பங்கீட்டு முறைமை!

கொழும்பு, ஜூன் 13

சாத்தியமான சமமான விநியோகத்தை செயற்படுத்த, எதிர்வரும் வாரங்களில் பங்கீட்டு முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரச அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மாத்தறை உட்பட்ட பல பகுதியில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படும் நிலையிலேயே இந்த ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையின் வரலாற்றில் இதற்கு முன்னர் இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையிடம் உணவு உதவியை நாடியதில்லை. எனினும் தற்போது உணவுக்காக இலங்கை ஐக்கிய நாடுகளின் உதவியை நாடியுள்ளது. (எ-இ)

# பொசனை முன்னிட்டு கைதிகள் விடுவிப்பு!

கொழும்பு, ஜூன் 13

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி 173 சிறைக்கைதிகளை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

தண்டனை இரத்து ஊடாக 141 கைதிகளையும், 14 நாள்கள் தண்டனை காலம் குறைப்பின் ஊடாக 32 கைதிகளையும் விடுதலை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 23 கைதிகளும் குருவிட்ட, மஹர, நீர்கொழும்பு, வீரவில, வாரியபொல, போகம்பர, அநுராதபுரம், களுத்துறை, கொழும்பு மகளிர் சிறைச்சாலை, தல்தெனை, வட்டரெக்க, பதுளை, மாத்தறை, அங்குணகொலபெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளில் இருந்து ஏனைய கைதிகளும் விடுவிக்கப்படவுள்ளனர்.

பொலநறுவை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை, பல்லன்சேன, வவுனியா, யாழ்ப்பாணம், காலி, பல்லேகலை மற்றும் திருகோணமலை ஆகிய சிறைச்சாலைகளில் இருந்தும் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நில விழுங்கலுக்கு குறைவில்லை

முல்லைத்தீவில், குமுழமுனையில் உள்ள தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த குருந்தூர் மலையில் புத்தர் சிலை அடாத்தாக நிறுவப்பட இருந்த முயற்சி மக்களின் போராட்டத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் காலங்காலமாக ஆதிசிவன் ஐயனார் வழிபாட்டில் ஈடுபட்ட இடம் குருந்தூர்மலை. ஆண்டுதோறும் பொங்கலிட்டு ஆதிசிவன் ஐயனாரை வழிபடுவது தமிழ்மக்களின் தொன்று தொட்ட மரபு. தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் அந்த இடம் இப்போது தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கின்றது.

2018ஆம் ஆண்டு பிக்கு ஒருவர் திடீரென அந்தப் பகுதியில் புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயன்றதை அடுத்து, இந்த விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றது. வழக்கு விசாரணைகள் நடைபெறும் நிலையில் அங்கு கட்டுமானங்களை அமைக்கத் தடை விதித்தது நீதிமன்றம். அதன்பின்னர் அங்கு தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் ஆதிசிவன் ஐயனார் சூலம் அகற்றப்பட்டு, தமிழ் மக்களின் வழிபாட்டு அடையாளங்களும் மாற்றப்பட்டு, இப்போது விகாரைக் கட்டுமானங்களும் கடுகதியில் நடந்து முடிந்துள்ளன.

நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நடத்தி முடிக்கப்பட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்பு ஒரு பிக்குவாலோ அல்லது ஒரு சிறு குழுவாலோ மேற்கொள்ளப்பட்டது அல்ல என்பது சிறு குழந்தைக்கும் புரியும். அரசாங்கத்தின் அனுசரணையுடன், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கிரமிப்பின் – அடக்குமுறையின் – ஒரு பகுதியே குருந்தூர்மலையில் நடந்தேறி முடிந்திருக்கின்றது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இவ்வாறான தொல்லியலின் பெயரிலான ஆக்கிரமிப்புக்கள் சர்வசாதாரணமாகியிருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் அதிகளவு நடந்தேறி முடிந்திருக்கின்றன. தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறான ஆக்கிரமிப்புகளில் எந்தத் தொய்வும் ஏற்படவில்லை. அரசாங்கத்தின் பூரண கிருபையோடு தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, அடையாளங்கள் அழிக்கப்பட்டு, பௌத்த மயமாக்கல் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், தமிழ் அரசியல் தலைமைகள் இது தொடர்பாக எந்தவிதப் பிரக்ஞையும் இன்றியே இருக்கின்றனர். இவ்வாறான ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஆளுக்கொரு அறிக்கை விடுவதைத் தவிர அவற்றைத் தடுப்பதற்கான காத்திரமான எந்த நடவடிக்களும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

நீதிமன்றங்களில் வழக்குகளை தொடர்வதன் மூலம் மட்டும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்களை நிறுத்தி விட முடியாது என்பதற்கு குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய விகாரை சாட்சியாகின்றது. இவ்வாறான ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்கு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தாண்டிய செயன்முறை ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். ஆனால் இதை முன்னின்று செய்ய வேண்டிய தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தில் அசமந்தமாகவே செயற்படுகின்றனர் என்று தோன்றுகின்றது.

தமிழ் அரசியல் தலைமைகள் இவ்வாறான ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்கு இனியேனும் காத்திரமான் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தற்போது இலங்கை அரசாங்கம் உள்ள சூழ்நிலைகளைப் பயன்படுத்தி சர்வதேசத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நில ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கான செயன்முறை ஒன்றை உடனடியாக வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நிலவிழுங்கல்கள் தொடர்பில் உடனடியாக செயலாற்றத் தவறினால் தமது பூர்வீக வாழ்விடங்களில் தமிழ் மக்கள் கால்வைக்க முடியாத நிலைமை விரைவில் உருவாகும் என்பதே நிதர்சனம்.

நாளொரு நல்வார்த்தை

"அறிவு காட்டும் வழியில் மட்டும் செல்லாதே; ஆன்மா கூறும் வழியில் செல்"

-டால்ஸ்டாய்




# இறக்குமதிக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளில் மாற்றம்!

கொழும்பு, ஜூன் 13

**இறக்குமதிகளுக்காகக் கடந்த இரண்டு மாதங்களாக விதிக்கப்பட்டிருந்த திறந்த கணக்கு முறைக்கான நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது.**

அதையடுத்து இலங்கையின் வர்த்தகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவுள்ளனர்.

திறந்த கணக்கு என்பது ஒரு வெளிநாடுகளில் உள்ள ஏற்றுமதியாளருக்கும் உள்நாட்டில் உள்ள இறக்குமதியாளருக்கும் இடையிலான நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஒரு ஏற்பாடாகும்.

இதன் கீழ் நாணயக்கடிதம் அல்லது டெலிகிராப் ட்ரான்ஸ்பர் என்பதற்கு அப்பால், ஏற்றுமதியாளர்களும், இலங்கையிலுள்ள இறக்குமதியாளர்களும் வங்கிகளுக்கு ஊடாக தமது கொடுப்பனவு மற்றும் பெறுதல்களை மேற்கொள்ள முடியும். இதன்படி வாடிக்கையாளர் ஒத்திவைக்கப்பட்ட கட்டண அடிப்படையில் பொருள்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

வர்த்தகர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வியாழக்கிழமை சந்தித்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை - வர்த்தகர்கள் அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, திறந்த கணக்குக்கான தடை நீக்கம் தவிர, அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய கூடுதலாக 100 மில்லியன் டொலர் விடுவிக்கப்படவுள்ளது. (ய)

# எதுவும் நடக்கலாம்

## பஸில் பூடகப் பேச்சு

கொழும்பு, ஜூன் 13

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை வரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனது சுயவிருப்பத்தின் பிரகாரமே தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தேன். எவரினதும் அழுத்தங்களால் எனது எம்.பி. பதவியை நான் துறக்கவில்லை. அரசியலில் எனது பயணம் தொடரும் என்று நான் ஏற்கனவே கூறிவிட் டேன். அந்தப் பயணம் எப்படி அமையும் என்று என்னால் வெளிப்படையாகக் கூற முடியாது.

நான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளேன் என்றும் செய்திகள் வெளிவருகின்றன. இதையடுத்து சிலர் எனக்கு எதிராகப் புதிய கட்சிகளை ஆரம்பிக்கும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர். இதை நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகின்றது. எத்தனை புதிய கட்சிகள் உருவாகினாலும் அவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஒருபோதும் சவாலாக இருக்கமாட்டா. எதிர்வரும் காலங்களில் என்ன தேர்தல் நடந்தாலும் அதில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றி வாகை சூடும். இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை. இன்று உயர் பதவியில் இருப்பவர்கள் நாளை சாதாரண பதவியில் இருக்கலாம். இன்று சாதாரண பதவியில் இருப்பவர்கள் நாளை உயர் பதவியில் இருக்கலாம். இலங்கை அரசியலில் எதிர்வரும் காலங்கள் தீர்க்கமானதாக இருக்கும் - என்றார். (எ-22)


நாளை

14.06.2022
செவ்வாய்க்கிழமை
வைகாசி 31

சுபநேரம் : 10.23 - 11.53
ராகுகாலம்: 02.53 -04.23

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றி உங்கள் கைகளில்

■ ஜீ.ஜீவனா

உன் மீது நம்பிக்கை வை. உன்னை நீயே புடம் போட்டுக்கொள். உனக்குள் உண்டு அத்தனையும் ஒவ்வொன்றையும் உருவி உணர்வோடு வெளியே வா. உலகம் உன்னைக் கண்டுகொள்ளும்' இது சுவாமி விவேகானந்தரின் கூற்று.

நீ எதுவானாலும் முதலில் முடியும் என்று முடிவாக நம்பு. வெற்றி நிச்சயம். உனது சிந்தனை எப்படியோ அப்படியே உனது வாழ்க்கை அமையும், நல்ல சிந்தனைகள், எண்ணங்களே எமது வாழ்க்கையை வடிவமைக்கும்.

எந்த ஒரு காரியத்திலும் வெற்றி பெறுவது இலகுவானதல்ல. நிறைய சவால்கள், தடைகள், இகழ்ச்சிகள், ஏளனங்கள் என்பவற்றைத் தாண்டித்தான் வெற்றிக் கனியை சுவைக்க முடியும். தோல்விகள், விமர்சனங்களைக் கண்டு அஞ்சாமல் துணிவுடன் நிமர்ந்து நில்லுங்கள், முயற்சி செய்யுங்கள் இமயமே உங்கள் வசமாகும். இறைவனுடைய கரங்



களை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு நடவுங்கள் எதிரிகள் தடுமாறுவார்கள். எங்களிடம் திறமை இல்லை. சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்று இருக்காதீர்கள். திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். சந்தர்ப்பங்களை உருவாக்குங்கள். உலகத் தலைவர்களின் வரலாறுகளை பின்நோக்கிப் பாருங்கள். நீங்கள் புதிய வரலாற்றைப் படைக்க முடியும்.

### சாதனையாளர்களின் பாதை கடினமானது

வறுமை, சோதனைகள், வேதனைகள், தடைகள் என்பவற்றைத் தாண்டி வந்தவர்களே சாதனையாளர்கள். பஞ்சு மெத்தையில் பணத்தில் திளைக்கும் மனிதர்கள் யாரும் சாதனையாளர்களாகத் திகழ்வதில்லை. ரஷ்யப் புரட்சித் தலைவர் ஜோசப் ஸ்டாலின் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகன்தான். அவரும் உதவியாக செருப்பு தைத்தவர்தான். அவனது சக மாணவர்களும் ஆசிரியர்களும் கூட அவனை எள்ளி நகையாடினவர்கள்தான். இந்தக் கேலிகள் வறுமைகள்தான் அவரைத் தூண்டி மாபெரும் புரட்சியை உருவாக்கி உலக வரலாற்றில் தன்னிகரில்லாத் தலைவனாக மாறுவதற்கு வழியேற்படுத்தின. நெல்சன் மண்டேலாவை தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். சிறு வயதில் ஆடு, மாடுகளை மேய்க்கும் வேலை செய்துகொண்டே கல்விகற்று மேதையானார். வெள்ளையர்களுக்கு எதிராக துணிந்து போராடி கறுப்பினத்தவர்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொடுத்து வெற்றிக்கொடி நாட்டினார்.

தமிழகக் கல்வியில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய காமராஜர் சாதாரண கல்வி அறிவுடன் புடைவைக் கடை ஒன்றில் துணி அளந்தவர். அவரது ஆற்றல் மிகு சாதனையால் தமிழகம் உயர்ந்தது. தோல்வி மேல் தோல்விகளை எதிர்நோக்கி உலகையே ஒளிக்குக் கொண்டு வந்த தோமஸ் அல்வா எடிசனை தெரியாதவர்கள் இருக்கமுடியுமா? அவரைக்கூட அவரது பாடசாலை நீ முட்டாள், மடையன், மக்கு என்று பல பட்டங்களைக் கொடுத்து நிராகரித்து வீட்டுக்கு அனுப்பியது. ஆனால், இன்று உலகம் வெளிச்சமாக இருப்பது அவரால்தான். மின்சார விளக்குகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் என்பதை சுட்டிகாட்ட நாடு முழுவதும் மின்சார விளக்குகளை நிறுத்தி எடிசனுக்கு வருடாவருடம் மரியாதை செலுத்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா.

மின்னல் வீரர் புரூஸ்லி வேலை தேடி அமெரிக்காவின் ஹொலிவூட்டுக்குப் போனபோது ஏளனம் செய்து எள்ளி நகையாடி நிராகரித்தார்கள். ஆனால், பின்னாளில் புரூஸ்லீயின் மின்னல் வேக சண்டைகள் சுழன்று சுழன்று பம்பரம் போன்று எதிரிகளை பந்தாடிய காட்சிகளைக் கண்ட ஹொலிவூட் புருஸ்லீ முன் தலைவணங்கி நின்றது.

### சாதனைக்குத் தேவை எது?

சாதனை படைக்க பணம் தேவையில்லை, கௌரவம் தேவையில்லை, உங்களுக்குள் இருக்கும் துணிச்சல்தான் சாதனைகளைக் கொண்டு வரும். உலகப் பணக்காரர் பில் கேட்ஸ்கூட எள்ளி நகையாடப்பட்டவர்தான். தோல்விதான் ஆரம்பம். அதை முடிவு என்று எண்ணி ஏமாறாதீர்கள். தோல்வி இல்லாத வாழ்வு எங்குமே இல்லை. அவமானம், வறுமை இல்லாத வாழ்வு எங்கும் இல்லை. அவமானம் தோல்விகளைத் தாங்கிய இதயம் வலிமை பெறும். மலையோடுகூட மோதும் ஆற்றல் பெறும். அப்துல்கலாம் இன்று உலகம் போற்றும் அணு விஞ்ஞானி. அவர் ஒருமுறை வானவியல் பரீட்சைக்கு தோற்ற தகுதியில்லை என நிராகரிக்கப்பட்டவர், சார்லி சப்ளின் நெப்போலியன் கூட வறுமையில் வாடியவர்கள்தான். பின்னாள்களில் சார்லி சப்ளின் உலகையே நகைச்சுவையால் சுருட்டியவர். நெப்போலியன் பொனபாட் வறுமைக்குடும்பத்தில் பிறந்து தன் திறமையினாலும் போர் நடவடிக்கையிலும் பிரான்ஸின் மாபெரும் சக்கரவர்த்தி ஆனார். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நிக்வுஜிசிக் பிறக்கும் போதே கைகள் கிடையாது. இடுப்புக்கு கீழ் கால்கள் கிடையாது.


அவருக்கு உடம்பில்தான் குறை இருந்ததே அன்றி மனதில் மகா கோடீஸ்வரர். இன்றைக்கு உலகின் மிகச் சிறந்த தன்னம்பிக்கை பேச்சாளர்களில் ஒருவர். சிறந்த பயிற்சியாளர். பார்த்தீர்களா? சாதனையாளர்களின் சரித்திரங்களை உற்று நோக்கிப் படியுங்கள். வாழ்க்கையில் தோல்வி உங்களை துரத்தலாம், வறுமை வாட்டலாம், அவமானங்கள் வரலாம், விமர்சனங்கள் நிறையலாம், எது வந்தாலும் உங்கள் மனதை, நம்பிக்கையை கைவிடாதீர்கள். "முடியும் என்னால் முடியும். நாளை என்னை உலகம் பாராட்டும்" என்ற கனவுடன் இலக்கை நோக்கிப் பயணியுங்கள். வெற்றி நிச்சயம். ■













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களுடைய செயலில் இன்று ஆதாயமான நிலை ஏற்படும். இன்று நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி ஒன்று உங்களை மகிழ்விக்கும். நீங்கள் நினைத்ததை இன்று செயற்படுத்தி முடிக்கும் நாள்.

**இடபம்:** வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உங்களை வந்து சேரும் நாள். தடைகளை எல்லாம் சரி செய்து இன்று முன்னேற்றம் காண்பீர்கள். சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் சுபச்செலவு அதிகரிக்கும். அதற்கேற்ற வரவையும் காண்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பொன் பொருள் வாங்கும் யோகம் உண்டு.

**கடகம்:** தைரியமும் தன்னம்பிக்கையும் உண்டாகும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். பணியிடத்தில் நெருக்கடிகளை சமாளித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். சங்கடம் இன்று விலகும்.

**சிம்மம்:** உங்கள் செயல்களில் இன்று ஆதாயம் அதிகரிக்கும். லாபகரமான நாள். பிரச்சினைகளை சரி செய்து புதிய முயற்சியில் இறங்குவீர்கள். உங்களுடைய திறமையால் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:** வரவுகளில் இருந்த தடைகள் அகலும். கொடுத்த வாக்கை நிறைவேற்று வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பாராத பண வரவு உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவம் ஒன்று நடைபெறும். குடும்ப நலனுக்காக துணிச்சலான முடிவு ஒன்றை எடுப்பீர்கள். உடன் பணியாற்றுபவர்களின் ஒத்துழைப்பால் ஆதாயம் கூடும்நாள்.

**விருச்சிகம்:** எதிர்பாராத செலவு உண்டாகலாம். செயலில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையுடன் உண்டான பிரச்சினை விலகி மகிழ்ச்சியைக் காண்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு உண்டாகும்.

**தனுசு:** நிதி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். இன்று திட்டமிட்டு செயற்படுவதால் உங்கள் தேவையை நிறைவேற்றிக்கொள்வீர்கள். வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்குவீர்கள்.

**மகரம்:** தொழிலில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை சரி செய்வீர்கள். போட்டியாளர்கள் விலகிச் செல்வர். பொருளாதார நிலை உயரும். இழுபறியாக இருந்த செயல் உங்களுக்கு சாதகமாக முடியும்.

**கும்பம்:** நண்பர்களின் ஆதரவுடன் பொதுக்காரியத்தில் வெற்றி காண்பீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த செயல் ஒன்று இன்று நிறைவேறும். உறவினர்கள் திடீர் என வருகை தந்து உங்களை மகிழ்விப்பர்.

**மீனம்:** உங்கள் பேச்சிலும்,செயலிலும் கவனம் தேவைப்படும் நாள். தடைகளை தாண்டி நினைத்ததை செயற்படுத்தும் நாள். வீடு, பணியிடத்தில் கோபம் கொள்ளாமல் நிதானத்தை கையாளுவது அவசியம்.

## சீனாவிடமிருந்து விலக எத்தனித்தால்

# தாய்வானைத் தாக்க தயங்கமாட்டோம்!

### அமெரிக்கப் பாதுகாப்புச் செயலரிடம் சீன அமைச்சர் நேர்படத் தெரிவிப்பு



**பீஜிங், ஜூன் 13**

**சீனாவில் இருந்து தாய்வானைப் பிரிப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றால், தாய்வானைத் தாக்குவதற்கு சீனா ஒருபோதும் தயங்காது என்று சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங், அமெரிக்கப் பாதுகாப்புச் செயலரிடம் நேருக்குநேர் தெரிவித்துள்ளார்.**

சிங்கப்பூரில் நடைபெற்ற உச்சி மாநாடொன்றின் பின்னர் இருவரும் நேருக்குநேர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அப்போது, தாய்வானை ஆக்கிரமிக்கும் சீனாவின் நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் என்று அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் கோரியுள்ளார். இதையடுத்தே சீனப் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனா தாய்வானை நாட்டின் ஒரு பகுதியாக கருதுகிறது. தாய்வானை சீனாவில் இருந்து பிரிக்கத் துணிந்தால் அதன் மீது போர் தொடுக்கவும் சீனா தயங்காது. மேலும், சில நாடுகள் சீனாவைக் கட்டுப்படுத்த தாய்வானைப் பயன்படுத்துவது ஒருபோதும் வெற்றிபெறாது. தாய்வனின் சுதந்திரம் என்னும் சதியை முறியடித்து நாட்டின் ஒருங்கிணைப்பை சீனா உறுதிசெய்யும் என்றும் அமைச்சர் வெய் பெங் மேலும் தெரிவித்தார். (ம)



# ரஷ்யா- சீனா இடையே முதல் சாலைப் பாலம்

மொஸ்கோ, ஜூன் 13

ரஷ்யா- சீனாவுக்கு இடையிலான முதல் சாலைப் பாலம் திறக்கப்பட்டுள்ளது.

அமுர் ஆற்றின் குறுக்கே 19 பில்லியன் ரூபிள் செலவில் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

சுமார் ஒரு கிலோமீற்றர் நீளத்தில் அமைந்துள்ள இந்த சாலைப்பாலம் ரஷ்ய நகரமான பிளாகோவெஷ்சென்ஸ்க்கை வடக்கு சீனாவின் ஹெய்ஹேவுடன் இணைக்கிறது. (ச-இ)

# முஷாரப் கவலைக்கிடம்



இஸ்லாமபாத், ஜூன் 13

பாகிஸ்தானின் முன்னாள் அதிபரும், இராணுவ ஆட்சியாளருமான முஷாரப் தற்போது கவலைக்கிடமான நிலையில் உள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

தற்போது டுபாயில் வசித்துவரும் முஷரப்பின் உடல் நிலை, கடந்த சில நாள்களாக மோசமடைந்து வருகின்றது என்றும், தற்போது அவர் கவலைக்கிடமாக உள்ளார் என்றும் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)



# 3 பில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பாலிருந்து பூமிக்கு 'சிக்னல்'!

வொஷிங்டன், ஜூன் 13

பூமியில் இருந்து கிட்டத்தட்ட 3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில், அண்டத்தின் மற்றொரு விண்மீன் மண்டலத்திலிருந்து விசித்திரமான ரேடியோ சமிக்ஞை ஒன்றை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வேறொரு விண்மீன் மண்டலத்திலிருந்து இவ்வாறான ரேடியோ சமிக்ஞை பூமிக்கு வருவது இது இரண்டாவது முறை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். சீனாவில் உள்ள குய்சோவில், அபெர்ச்சர் ஸ்பெரிகல் ரேடியோ டெலஸ்கோப் மூலம் விஞ்ஞானிகள் இந்த சமிக்ஞையை பின்தொடர்ந்தனர். கிட்டத்தட்ட 75 வெடிப்புகள் இந்த சமிக்ஞையிலிருந்து வந்ததை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். (ம)



# பீய்பருக்கு முடக்குவாதம்

ஒட்டாவா, ஜூன் 13

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்டுள்ள, பிரபல 'பொப்' பாடகர் ஜஸ்ரின் பீய்பரின் முகம் முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

பீய்பரின் முகத்தின் பாதிப்பகுதி முடக்குவாதத்தால் செயலிழந்து போயுள்ளது என்றும், அவரது கேட்கும் திறனுக்கு இதனால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து பீய்பரின் பல இசை நிகழ்ச்சிகள் [illegible] அவர் சிறப்பு மருத்துவக் குழுவின் கண்காணிப்பில் தற்போது உள்ளார். (ம)

## 129 கிலோ எடையை

# ஒரு விரலால் தூக்கி கின்னஸ் சாதனை



லண்டன், ஜூன் 12


இங்கிலாந்தைச் சேர்ந்த 48 வயதான ஸ்டீவ் கீலர் என்பவர் ஒற்றை விரலால் 129 கிலோ எடையைத் தூக்கி 10 ஆண்டுகால உலக கின்னஸ் சாதனையை முறியடித்துள்ளார். இதுகுறித்து ஸ்டீவ் கீலர் கூறுகையில்,

"இது நம்பமுடியாத அளவுக்கு வேதனையானது. ஆனால் என் விரல்கள் வலுவாக உள்ளன. மேலும் எனது வலிமை குறித்து நான் பெருமைப்படுகிறேன்" என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவிடம் இருந்தும் எண்ணெய் இறக்குமதி

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 13**

**பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள்களைத் தேடி வேட்டையில் இறங்கியுள்ள இலங்கை ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம், முதலில் வேறு தரப்புகளிடமிருந்து எரிபொருளை பெறமுடியுமா? எனப் பார்ப்பேன். ஆனால், எண்ணெயை ரஷ்யாவிடமிருந்து பெறுவதற்கு தயாராகவுள்ளேன் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் மீதான போர் காரணமாக விதிக்கப்பட்ட தடைகளால் மேற்குலகநாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள்களைப் பெறுவதை நிறுத்தியுள்ள நிலையிலேயே வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் கடன் அதிகரிக்கின்றபோதும் சீனாவிடமிருந்து நிதி உதவியைப் பெற தயாராக இருக்கின்றது. தற்போதைய நிலைக்கு இலங்கையே காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அத்துடன் உக்ரைன் போர் நிலைமையை மேலும் மோசமானதாக்குகின்றது. 2024 வரை உணவுத் தட்டுப்பாடு நீடிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைக்கு எரிபொருள் மிகவும் அவசியமாக உள்ளது. தற்போது மத்திய கிழக்கில் உள்ள அதன் பாரம்பரிய வழங்குநர்களிடமிருந்து நிலக்கரியை பெற முயல்கின்றோம். வேறு எந்தத் தரப்பிடமிருந்தாவது எண்ணெயை பெறமுடியும் என்றால் அவர்களிடமிருந்து பெறுவோம், இல்லாவிட்டால் ரஷ்யாவிடமே செல்ல வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் 51 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. எனினும் இந்த வருடம் செலுத்தவேண்டிய ஏழு பில்லியன் டொலர் கடனை செலுத்துவதை இலங்கை இடைநிறுத்தியுள்ளது.

மிகமோசமான கடன், இலங்கை அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. தட்டுப்பாடுகள் காரணமாக மின்வெட்டு ஏற்பட்டுள்ள அதேநேரம், பொதுமக்கள் பலகிலோமீற்றர் தூரத்துக்கு சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் நிற்கின்றனர்.

இரண்டு வாரத்துக்கு முன்னர் இலங்கை தனது ஒரேயொரு எண்ணெய் சுத்திரிகரிப்பு நிலையமான சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ரஷ்யாவிடமிருந்து 90 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெயைப் பெற்றது. வெளிநாட்டு ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவித்தபோது, அது தொடர்பாக எதுவும் தெரிவிக்காத விக்கிரமசிங்க ரஷ்யாவிடமிருந்து மேலும் எண்ணெய்க்காக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து தெரியாது - என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 13

கல்தொட்ட, கூரகல ரஜமஹா விகாரை வளாகத்தில் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடத்தில் இருந்து சுமார் 20 அடி உயரத்தில் இருந்தே இந்த நபர் கீழே விழுந்துள்ளளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் புலத்சிங்களப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் பலாங்கொடை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக கல்தொட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## பஸ்ஸிலிருந்து டீசல் திருட முயன்றவர் கைது



கொழும்பு, ஜூன் 13

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பசறையிலிருந்து மாத்தறைக்குச் செல்லும் பஸ்ஸின் டீசல் கொள்கலன் மூடியை உடைத்து டீசல் திருட முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை பஸ்ஸை பசறை பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைத்திருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தனியார் பஸ் ஒன்றில் நடத்துநராகப் பணியாற்றும் ஒருவரே டீசலைத் திருட முயன்றார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-இ)

## ஆஸி. நோக்கிப் பயணித்த 38 பேர் கடற்படையால் கைது

கொழும்பு, ஜூன் 13

நீர்கொழும்பில் இருந்து அவுஸ்திரோலியாவுக்கு படகில் செல்ல முற்பட்ட 38 பேரை தென்கிழக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்துள்ளனர்.

இயந்திரப் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்ட 6 சிறுவர்கள், 6 பெண்கள் உள்ளடங்கலாக 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்பொழுது அம்பாறை - பாணமை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் கடற்பகுதியில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பதில் அவுஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்ட படகை கடற்படையினர் சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

அதில் இருந்த 38 பேரும் வாழைச்சேனை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும், பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (எ-இ)

## பொய்யான தகவல்களால் வாய்ப்பை இழந்த இலங்கை

### *அமெ. தூதுவர் சுட்டிக்காட்டு*



பொய்யான தகவல்களைப் பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக நல்ல வாய்ப்புக்களை இலங்கை இழந்துள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

எம்.சி.சி. உடன்படிக்கை மூலமாக 400 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக இலங்கைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால், பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக இன்று நல்ல வாய்ப்புக்களை இலங்கை இழந்துள்ளது. இது கிடைத்திருந்தால் இன்று நாட்டு மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## மத்தள விமான நிலையத்தால் மாதாந்தம் ரூ.100 மில். நட்டம்

கொழும்பு, ஜூன் 13

மத்தள விமான நிலையத்தின் ஊடாக மாதாந்தம் 100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்துக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு கருத்து தெரிவிக்கையில்;

மத்தள விமான நிலையத்தின் ஊடாக மாதாந்தம் 100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது எனத் தெரியவந்துள்ளது. மத்தள விமான நிலையம் தனியார் மயமாக்கப்படாமல் தொடர்ந்தும் புனரமைக்கப்படும். அத்துடன் விமான நிலையத்தில் ஏற்படும் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன் - என்றார். (ச-இ)

## மூன்று மாதங்களில் 3,000 போராட்டங்கள்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் கடந்த மூன்று மாதங்களில் 3 ஆயிரத்து 516 ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன என்று பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு, டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றைக் கோரியே இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8 ஆம் திகதிவரையான மூன்று மாதங்களில் சமையல் எரிவாயுவுக்காகவே அதிக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



சமையல் எரிவாயு கோரி ஆயிரத்து 185 ஆர்ப்பாட்டங்களும், பெற்றோல் வழங்கக் கோரி ஆயிரத்து 173 ஆர்ப்பாட்டங்களும், டீசல் வழங்கக் கோரி ஆயிரத்து 5 ஆர்ப்பாட்டங்களும், மண்ணெண்ணெய் கோரி 153 ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 2 ஆம் திகதி முதல் மே மாதம் 8 ஆம் திகதிவரையான ஒருவார காலத்திலேயே அதிக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேநேரம் இந்த வாரத்தில் மட்டும் நாடு முழுவதும் ஆயிரத்து 111 ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காங்கேசன்துறை சாரணரால் மாணவர்களுக்கு சத்துணவு

யாழ்ப்பாணம், ஜூன் 13
காங்கேசன்துறை பிரிவு சாரணர்களால் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தின் கீழ் காரைநகர் மெய்கண்டான் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவாக இலைக்கஞ்சி நேற்று வழங்கப்பட்டது.
பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை சாரணர் சங்கத்தால் சத்துணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் தேசிய ரீதியாக கடந்த 6 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
இலங்கையிலுள்ள 37 சாரணர் மாவட்டங்களிலும் சத்துணவுத் திட்டம் ஆரம்பித்துள்ள நிலையில் காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தில் காரைநகர் மெய்கண்டான் ஆரம்பப் பாடசாலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
நிகழ்வில் காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் ஜெயபாலன், காரைநகர் மெய்கண்டான் ஆரம்பப் பாடசாலை அதிபர் பேரின்பகுமார், சாரண ஆசிரியர்கள், சாரணர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-14-125)

# பாவனையாளர் அதிகார சபை நேற்றும் விசேட சோதனை!

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாணத்தில் நேற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் பணிப்புரையின்கீழ் யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினர் மற்றும் பொலிஸாரும் இணைந்து நேற்றுப் பல்பொருள் அங்காடி, மொத்த வியாபார நிறுவனங்களில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.
இந்தச் சோதனை நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெறும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (எ-இ)






## அனுமதியின்றி கொத்து விறகு கொண்டு சென்றவர்கள் கைது

கிளிநொச்சி, ஜூன் 13
ஆனையிறவில் நேற்று அனுமதியின்றி ஏற்றிச் செல்லப்பட்ட கொத்து விறகுகள் கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
இது தொடர்பில் வாகனச் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்று அதிகாலை 6 வாகனங்களில் பாலை, பூவரசு போன்ற கொத்து விறகுகள் அனுமதியின்றி ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று கிளிநொச்சி மது ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆனையிறவில் சோதனை நடத்தப்பட்டது. அதன்போதே வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வானங்களுடன் சாரதிகள் பளைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-113)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13
ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் நாவலர் ஆண்டில் நடத்தும் மாதாந்த "பௌர்ணமி விரத கால" சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாவலர் குருபூசையைத் தொடர்ந்து தலைமையுரையை சிவகாந்தனும் சிறப்புச் சொற்பொழிவை "சைவ வாழ்வில் பௌர்ணமியின் முக்கியத்துவம்" என்னும் கருப்பொருளில் சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.முகுந்தனும் ஆற்றவுள்ளனர். அதைத் தொடர்ந்து சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ-14)

## பொருண்மியம் நலிந்த குடும்பத்துக்கு உதவி

கிளிநொச்சி, ஜூன் 13
பூநகரி - முக்கொம்பன் பகுதியைச் சேர்ந்த பொருண்மியம் நலிந்த குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் ஒன்றும் பிள்ளைகளுக்கு புத்தகப்பைகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
'பூமணி அம்மா' அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் விசுவாசம் செல்வராசாவின் ஏற்பாட்டில், பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளர் என். விந்தன் கனகரட்ணம் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகளின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (எ-14-50)



## போதைப்பொருள் விழிப்புணர்வு விசேட செயலமர்வு மன்னாரில்

மன்னார், ஜூன் 13
"இளைஞர், யுவதிகளுக்கு இடையே சமூக ஒத்திசைவைப் பலப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான விசேட செயலமர்வு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி ஆகியன மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இளையோருக்கு போதைப் பொருள் தொடர்பான தெளிவூட்டல்களை உருவாக்கும் நோக்குடனும் சமூக ரீதியாக போதைப் பொருள் பயன்பாட்டை இல்லாதொழிக்க மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளை உருவாக்கும் நோக்குடனும் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்குமான சத்தியப்பிரமாணமும் இளையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் வாழ்வுக்கான தன்னார்வத் தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற செயலமர்வில், ரஹமா நிறுவனப் பணிப்பாளர், ரஹமா நிறுவன அதிகாரிகள், லியோ இளைஞர் கழக உறுப்பினர்கள், இளையோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ-14-213)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 13
மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் அவ்வப்போது மழைபெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.



வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என் பதுடன் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஊவா, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவுவேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இதனால் இடியுடன்கூடிய மழையால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைக்கத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## மூன்று வாரங்களில் யூரியா

கொழும்பு, ஜூன் 13
இந்தியக் கடன் திட்டத்தில் வழங்கப்படும் யூரியா உரத்தின் முதல் தொகுதி எதிர்வரும் மூன்று வாரங்களில் நாட்டை வந்தடையும் என கொமர்ஷல் உர நிறுவனம் தெரிவித்துள்ளது.
அதன் தலைவர் மெத்சிறி விஜேகுணவர்தன இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
முதல் தொகுதியாக 40 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் கிடைக்கவுள்ளது. அதுவரை தற்போதுள்ள உரத் தொகையை தேசிய உர செயலகத்துடன் இணைந்து மாவட்ட ரீதியாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தியாவிடமிருந்து உரம் கிடைத்த பின்னர் உடனடியாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் -என்றார். (ய)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறுப்பேற்கப்படாத 24,000 கிலோ அப்பிள்கள் மிருகக்காட்சிச் சாலைக்கு

கொழும்பு, ஜூன் 13

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 24 ஆயிரம் கிலோ கிராம் அப்பிள்களை உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளாததையடுத்து அவை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதம் சீனாவில் இருந்து குறித்த அப்பிள்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும், இந்த அப்பிள்கள் இறக்குமதியாளர்களால் பொறுப்பேற்கப்பட வில்லை. இதையடுத்தே அவற்றை மிருகக் காட்சிச்சாலைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக் கப்பட்டு தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த குறித்த கொள்கலன்களில் சுமார் ஒரு லட்சம் அப்பிள்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## இலங்கைக்கான விமானங்களை நிறுத்தியது லண்டன் நிறுவனம்!

கொழும்பு, ஜூன் 13

லண்டனைத் தளமாகக் கொண்ட முன்னணி சுற்றுலா பயண விமான நிறுவனமொன்று இலங்கைக்கான விமானங்களை இந்த மாத இறுதிவரையில் இரத்துச் செய்துள்ளது.

இந்த அறிவிப்பை அந்த நிறுவனம் இந்த வாரம் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இந்த விமான நிறுவனம் முதலில் இந்த மாதம் 12ஆம் திகதிவரை இலங்கைக் கான அனைத்து விமானங்களையும் ரத்து செய்திருந்த நிலையில், தற்போது அதை எதிர் வரும் 30ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

இலங்கையில் தொடரும் அரசியல் மற்றும் பொருளாதார உறுதித்தன்மை அற்ற நிலை மையே இதற்கான காரணங்களாகும். இந்த நிலையில், புதிய பயணத் திகதிகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களு டனும் தொடர்பு கொள்ளப்படும் என்று நிறுவ னம் அறிவித்துள்ளது. (எ-இ)

# ஆஸி. இலங்கைக்கு உதவக்கூடிய வழிமுறை தொடர்பில் ஆராய்வு!

**கொழும்பு, ஜூன் 13**

**இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேலும் மேம்படுத்துவதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ள வெளிநாட் டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அவுஸ்திரேலியாவால் உதவக்கூடிய வழிகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.**

சிங்கப்பூரில் இடம்பெற்ற நிகழ் வொன்றின் பின்னர் அவுஸ்திரேலி யாவின் பிரதிப் பிரதமரும் பாது காப்பு அமைச்சருமான கலாநிதி ரிச்சர்ட் மார்லஸுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் பீரிஸ் இந்த விடயங்களைக் கலந்துரையா டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் புதிய அரசாங் கத்துக்கு வாழ்த்துக்களைத் தெரி வித்த அமைச்சர் பீரிஸ், இலங்கைக் கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடை யிலான இருதரப்பு உறவை மேலும் மேம்படுத்துவதில் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

உலக உணவுத் திட்டம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் ஊடாக இலங்கை யின் உணவுப் பாதுகாப்பை மேம்ப டுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்ட அபிவிருத்தி உதவியாக 2.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலரை அறிவித்தமைக்காக அவர் அவுஸ் திரேலியா அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார். இலங்கையின் தற் போதைய நிலைமை மற்றும் அவுஸ் திரேலியாவால் உதவக்கூடிய வழி கள் தொடர்பாக இரு அமைச்சர் களும் கலந்துரையாடினர். ஆள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கை கள், குடியேற்றம் மற்றும் எல்லை நிர்வாக ஒத்துழைப்பு, இலங்கை மாணவர்களுக்கான அதிக வாய்ப் புக்கள் மற்றும் ஆசியான் பிராந்திய மன்றம், பாலி செயன்முறை, பொது நலவாயம் மற்றும் இந்து சமுத்திர விளிம்பு சங்கம் போன்ற சர்வதேச அமைப்புக்களிலான மேம்பட்ட ஒத் துழைப்பு ஆகியன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று வெளி விவகார அமைச்சு தெரிவித்துள் ளது. (எ-இ)

## மே 9 வன்முறை: 21 பேர் கைது

கொழும்பு, ஜூன் 13

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாட்டின் பல பகுதி களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 21 பேர் கைதுசெய்யப்பட்டுள் ளனர். அன்றையதினம் பதிவான 857 வன் முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 2 ஆயிரத்து 725 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் ஆயிரத்து 83 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, ஹோமாகம பிரதேச சபை சொத்துகளுக்குச் சேதம் ஏற்படுத் தியமை மற்றும் கொட்டாவை பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்தமை தொடர் பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். பல்கலைகழக மாணவர் ஒருவரே கைதுசெய்யப்பட்டவராவார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (எ-இ)

## அரச கடன் தொடர்பில் விசேட கணக்காய்வு!

கொழும்பு, ஜூன் 13

நாட்டின் அரச கடன்கள் தொடர்பான விசேட கணக்காய் வொன்றை தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆரம்பித் துள்ளது.


2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 3 வருட காலப்பகுதியில் பெறப்பட்ட அரச கடன்கள் தொடர்பில் இந்த விசேட கணக்காய்வில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் சுலந்த விக்ரமரத்ன தெரி வித்துள்ளார்.

இந்த விசேட கணக்காய்வு அறிக்கையை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம், நாட்டின் வருமானம் மற்றும் செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கணக்காய்வின்போது அதிக கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# நாடாளுமன்றின் வெளியே மக்களுக்கான அதிகாரம்!

## *வலியுறுத்துக்கின்றது முன்னிலை சோசலிசக் கட்சி*



கொழும்பு, ஜூன் 13

மக்களின் அதிகாரத்தை நாடா ளுமன்றத்துக்கு வெளியில் உருவாக்குவது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும் என முன் னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குண ரட்ணம் தெரிவித்தார். யாழ்ப்பா ணத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

மக்கள் அதிகாரத்தை அரசாங் கத்துக்கு வழங்குவதாலேயே பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்கின்றனர்.

கடந்த 74 வருடங்களாக இதே நிலைமையே காணப்படுகின் றது. பொதுஜன பெரமுனவோ, ஐக்கிய தேசிய கட்சியோ ஐக் கிய மக்கள் சக்தியோ ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு பதிலாக, மக்கள் தமது அதி காரத்தை உருவாக்குவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

மக்கள் வாக்களித்து விட்ட வு டன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணும் நிலை மையே தற்போது உள்ளது.

கிராம மட்டத்தில் இருந்து மாவட்ட தேசிய ரீதியில் ஜனநாயக அடிப்படையில் தேசிய பேரவை உருவாக்கவேண்டும். அது கடி னமான விடயம். தற்போது இடம்பெறுகின்ற போராட்டங்கள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்காக அல்லாது [illegible] கும் மேலாக அதற்கு [illegible] யால் இடம்பெறுகின்ற விடயங் களே ஆகும்.

அந்தப் போராட்டத்தின் நோக் கம் தற்போது வரை எட்டப்பட வில்லை. இருந்தாலும் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜ பக்ச ஆகியோர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. சுயாதீன மான மக்கள் போராட்டங்களா லேயே இவை நடந் தன. நிறைவேற்ற திகார முறை இல்லாமல் செய்யப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக் கப்பட வேண்டும்.

சர்வஜன வாக்கெ டுப்பை மக்கள் மத்தி யில் நடத்தி புதிய அர சமைப்பை உருவாக்க வேண்டும்.

அது வெளியில் இருந்து பெறப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட் டமைப்புடன் பேசியபோதும் இதற்கு உடன்பட்டார்கள். நிறை வேற்று அதிகார முறையை இல்லாமல் செய்து தேசிய பிரச் சினைக்கு இறுதித் தீர்வு காணப் படவேண்டும். இனவாதம் இன ஒடுக்குமுறைக்கு எதிரான சட் டங்களைக் கொண்டு வரவேண் டும்.

அரசியல் மாற்றம் ஏற்பட்டாலே பொருளாதார ரீதியான பிரச்ச னைகளுக்குத் தீர்வு காண முடி யும். சாதாரண மக்களிடம் அற விடப்படும் வரியே 88 சதவீத மாக காணப்படுகின்றது.

இந்த முறை மாற்றப்பட்டு செல் வந்தர்களிடமும் முதலாளிகளி டம் வரியை அறவிட வேண்டும். வரி ஏய்ப்பு செய்த தம்மிக பெரே ராவை பஸில் ராஜபக்சவின் வெற்றிடத்துக்குக் கொண்டு வர வுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு எது வித பதிலும் சொல்லாத பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பிரச்சினை யின் ஆழம் தொடர்பிலேயே கூறுகின்றார்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரியுண்ட வீட்டைப் பார்த்து அழுத பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூன் 13

கம்பஹா உடுகம்பொல பிரதேசத்தில் தீ வைத்து எரிக்கப்பட்ட தனது வீட்டை நேற்றுமுன்தினம் பார்வையிடச் சென்ற அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரது குடும்பத்தினர் அழுது புலம்பியுள்ளனர்.

வீடு தீ வைத்து எரிக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு பின்னர் அமைச்சர் பிரசன்ன தனது குடும்பத்துடன் வீட்டைப்பார்வையிட சென்றிருந்தார்.

எரிக்கப்பட்ட வீட்டை பார்த்து அழுது புலம்பிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போது பிக்குகள் மற்றும் கத்தோலிக்க மத குருமாரை கடுமையாக விமர்சித்துள்ளார்.

நான் தானம் வழங்கும் பிக்குமார், கொலைகளை செய்வது குறித்து மேடைகளில் ஏறி பேசுகின்றனர். அத்துடன் கடந்த மே 9 ஆம் திகதி நடந்த வன்முறை சம்பவங்களுக்கு பிக்குமாரும், கத்தோலிக்க மதகுருமாருமே தலைமைத்துவத்தை வழங்கினர்.

இதனை நான் நாடாளுமன்றத்திலும் கூறினேன். வெளியில் வந்து தற்போது மீண்டும் கூறுகிறேன், முடிந்தால், வழக்குத் தாக்கல் செய்யுங்கள் என்று சவால் விடுக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## பஸிலை சிறையில் அடைக்கவேண்டும்

*அத்துரலிய ரத்தின தேரர் ஆவேசம்*

கொழும்பு, ஜூன் 13

நாட்டுக்கு இழைத்த குற்றத்துக்காக முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவை சிறையில் அடைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

குடும்ப அரசியலை முன்னின்று வழிநடத்தியவர் இன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், இவ்வாறான விடயங்களை செய்த ஒருவர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற முடியுமா என கேள்வி எழுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது அவருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி விட்டு சிரித்துக் கொண்டே வீட்டுக்குச்சென்றுள்ளார். இன்று நாட்டில் அவரைப் பற்றி யாரும் கதைப்பதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-இ)

## மீன் விலை அதிகரிப்பு

சந்தையில் மீனின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பாலும் இவ்வாறு மீனின் விலை கடுமையாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய, தலபத், கொப்பரை போன்ற மீன்கள் கிலோ ஒன்று 2 ஆயிரத்து 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

## மூன்றாம் ஆண்டு நினைந்துருகல்

மண்ணில் 14 - 11 - 1948



விண்ணில் 15 - 06 - 2019

அமரர் திருமதி

### சறோஜினிதேவி கோபாலபிள்ளை

திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க சதுர்த்தசி (13.06.2022)

அன்புத் தெய்வமே ஆருயிர் அம்மா
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மாவின் பாசத்துக்கும் பண்புக்கும் ஈடாகுமா
உங்களைப் பிரிந்து மூன்றாண்டாகியது
உங்கள் தாய்மைச் சுவாசம் என்றென்றும்
எங்கள் வாழ்வில் நிலைக்கட்டும் அம்மா
அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அரசடிப்பிள்ளையாரையும், பண்டாரப்பிள்ளையாரையும், நயினை நாகபூசணியையும் நல்லூரநனையும் பிரார்த்திக்கின்றோம்.


2/1, மூர்த்த விநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
077 404 7922

(CS 45189)(3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 02 . 1958



இறப்பு 12 . 06 . 2022

### நடராசா சிவசோதிநாதன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவசோதிநாதன் நேற்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், பத்மதேவியின் அன்புக் கணவரும், கோபிநாத், துர்க்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாதம் (அரசன்), நிலா, ரதி, வசந்தி, ரஞ்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஒட்டுமடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 23, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 45167) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 10 . 1952



மறைவு 11 . 06 . 2022

### திருமதி. சறோஜினிதேவி ஜெயகுணபாலன்

( ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியர் வேலணை பிரதேச சபை )

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டி, நல்லூர் ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சறோஜினி தேவி ஜெயகுணபாலன் அவர்கள் 2022.06.11 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயகுணபாலன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோதிலிங்கம் தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சோதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவாஜினி (பிரான்ஸ்), சிவறூபன் (கனடா), பிரதீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலேந்திரன் (பிரான்ஸ்), மணிமேகலா (கனடா), முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், கஜானன், வைஷ்ணி, அனிஸ்னன், அஸ்மிதா, யவிஷன், சகீஷன், தருணஜா, விபீஷ்ணா, சஜீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நாகராஜா (லண்டன்), திலகவதி (லண்டன்), கோவிந்தராணி (ஆசிரியர்-யா/பெரியபுலம் ம.வி), கமலாதேவி (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்ற சதீஸ்குமார், றஞ்சித்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனடாவில் வசிக்கும் பாக்கியலட்சுமி, கேதாரலிங்கம், தேவநாயகம், சற்குணலிங்கம், ராசாத்தி, மணி, வசந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

645/1 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
முகுந்தன் [illegible]
071 233 1684

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 10 . 1962



இறப்பு 10 . 06 . 2022

### திரு. வைத்திலிங்கம் சிவானந்தன்

யாழ்ப்பாணம் மானிப்பாய் டச்சு வீதியை (தோறாந்தோட்டம்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவானந்தன் அவர்கள் 10.06.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், கதிரேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மாவதி, காலஞ்சென்ற விஜயராணி, காலஞ்சென்ற சண்முகநாதன், மகேந்திரராஜா, விக்கினராஜா (கனடா), காலஞ்சென்ற புலேந்திரராஜா, பவளராணி (ஜேர்மனி), சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன், ஜெகநாதன் (ஜேர்மனி), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விந்துஜா (லண்டன்), பானுஜா (லண்டன்), சுஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமலன் (லண்டன்), பகிதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆரவி, அஸ்விந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 618 3395

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலும் கைவரிசை காட்டுகிறார் நரேந்திர மோடி

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 13**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் குளறுபடிகள் தற்போது பாக்குநீரிணையையும் கடந்து இலங்கை நோக்கிப் பயணித்துக் கொண்டுள்ளதாக ராகுல் காந்தி குற்றஞ்சுமத்தியுள்ளார்.**

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அழுத்தம் கொடுத்தாக, இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்திருந்தார். இதனை ஜனாதிபதி கோத்தாபய மறுத்து சில மணி நேரத்தில், தனது கருத்தை மீளப் பெறுவதாக மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (ஒ-இ)

# கொன்சியூலர் பிரிவின் சேவைகள் மட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவில் சேவைகளை நாடும் அதிக எண்ணிக்கையிலான மக்களை கருத்திற்கொண்டு, விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்ட இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை கொன்சியூலர் விவகாரப் பிரிவு அவசர விடயங்களுக்காக மாத்திரம் பொதுமக்களுக்கு திறந்திருக்கும்.

கொன்சியூலர் விவகாரப் பிரிவு பொசன் போயா தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை மூடப்பட்டு, வழக்கமான செயற்பாடுகளுக்காக நாளைமறுதினம் புதன்கிழமை திறக்கப்படும்.

அதேசமயம், யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களும் இன்று திங்கட்கிழமை வரையறுக்கப்பட்ட சேவைகளுக்காக திறக்கப்படும்.

சேவைகளை நாடுபவர்கள் தமக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பின்வரும் இலக்கங்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கொன்சியூலர் விவகாரப் பிரிவு | கொழும்பு | 0112 338 812 / 0112 338 843 |
| பிராந்திய தூதரக அலுவலகம் | யாழ்ப்பாணம் | 0212 215 970 |
| பிராந்திய தூதரக அலுவலகம் | மாத்தறை | 0412 226 697 |
| பிராந்திய தூதரக அலுவலகம் | கண்டி | 0812 384 410 |
| பிராந்திய தூதரக அலுவலகம் | திருகோணமலை | 0262 223 182 |
| பிராந்திய தூதரக அலுவலகம் | குருநாகல் | 0372 225 941 (ஒ-இ) |



# தம்மிக்கவுக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஜூன் 13

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள தம்மிக்க பெரேராவின் இல்லத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அவர், அரசியலுக்கு நுழைவதை எதிர்த்தே அவரது கொழும்பு இல்லத்தின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. 10 க்கும் குறைவானோரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-இ)

# 600 எரிவாயு சிலிண்டர்களுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 13

அநுராதபுரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 600 சமையல் எரிவாயு கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளன. நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் குறித்த சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பதுக்கிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சிலிண்டர்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். (ஒ-இ)

# இயக்குநர் சபை தெரிவு

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இயக்குநர் சபை நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக, கு.ஜனகன், உப தலைவராக ஞா.இன்பகரன், இயக்குநர் சபை உறுப்பினர்களாக ப.சஞ்ஜீவன், பா.தயாகரன், பி.தளிர்ராஜ், ஆ.இரத்தினராசா, ஆ.வசீகரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ஒ-9)

# இலங்கை விவகாரம் குறித்து நாடாளுமன்றக் குழுவுக்கு விளக்கம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் முன்வைக்கிறார்

கொழும்பு, ஜூன் 13

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை விவகாரம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் நாடாளுமன்ற கலந்தாய்வு குழுவுக்கு எதிர்வரும் 18ஆம் திகதி விளக்கமளிக்கவுள்ளார். இந்தக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் முக்கியமான அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை புதுடில்லி கொழும்புக்கு எவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளது போன்ற விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கவுள்ளார். (ஒ-இ)

# மன்னார் இரட்டைக் கொலை வழக்கு: வெளிமாவட்டத்தவர்களுக்கும் தொடர்பு?

மன்னார், ஜூன் 13

நொச்சிக்குளம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில்இருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அனைவரும் தலைமறைவாகி காடுகளில் பதுங்கியுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 3பேரும் தொடர்பு பட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக உயிலங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

படுகொலை சம்பவத்தில் நொச்சி குள்த்தைச் சேர்ந்த 16 ஆண்கள் நேரடியாக தொடர்புபட்ட நிலையில் அவர்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர்களை விரைவில் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள விசேட பொலிஸ் குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளதாகவும் உயிலங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மூவர் பங்கேற்றுள்ளமை குறித்து பொலிஸ் புலன் விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், மூவரும் மேற்படி கொலைகளை மேற்கொள்வதற்காகவே வேறு மாவட்டத்தில் இருந்து நொச்சிக்குளத்துக்கு அழைத்துவரப்பட்டு இருக்கலாம், என புலன்விசாரணையில் தெரியவருவதாக உயிலங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் சுட்டிக்காட்டினார்.

நொச்சிக்குளம் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தற்பொழுது அந்தக் கிராமத்தில் இருந்து தலைமறைவாகி, உறவினர்களின் வீடுகள் மற்றும் காட்டுப்பகுதிகளில் மறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் பொலிஸாரும் இவர்களின் மறைவிடம் குறித்து விசாரணை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை 10 ஆம் திகதி மு.ப. 11 மணியளவில் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் நிகழ்ந்த வாள் வெட்டு சம்பவத்தில் இரண்டு குடும்பஸ்தர்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர். 40 வயதுடைய யேசுதாசன் ரோமியோ மற்றும் 33 வயதுடைய யேசுதாசன் தேவதாஸ் எனும் உடன் பிறந்த சகோதரர்கள் இருவரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த நான்காம் திகதி உயிலங்குளத்தில் நடந்த மாட்டு வண்டிச்சாவரியே படுகொலை சம்பவத்துக்கு பிரதான காரணமாக இருந்ததாக தெரிவிக்கப்படும் நிலையில் குறித்த கொலைக்கு முக்கியமான காரணம் உயிலங்குளத்தைச் சேர்ந்த சிலருக்கும், நொச்சிக்குளத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலவும் பகைமையே என நொச்சிக்குளம் அயல் கிராம வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம் கடந்த வெள்ளி காலை நொச்சிக்குளம் பகுதியில் நிகழ்ந்த குறித்த இரட்டைக்கொலை சம்பவம் மன்னார் மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் குறித்த படுகொலை சம்பவம் மன்னார் நொச்சிக்குளம் கிராம மக்கள் மத்தியில் கடும் அச்சத்தை ஏற்படுத்திய நிலையில், அந்தக் கிராமத்தில் பாதுகாப்பு கடமைகளுக்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## குருந்தூரில்...

கொள்ளக்கூடாதென நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது.

அந்த உத்தரவையும் மீறி அங்கு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்னும் போர்வையில் புதிதாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. புதிய விகாரைக்குரிய விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கும், 'கபோக்' கல்லினால் ஆன புத்தர் சிலையை குருந்தூர் மலையில் நிறுவுவதற்கும் நேற்றுத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்குரிய ஏற்பாடுகளை பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டிருந்தனர். நேற்றைய தினம் வழிபாடுகளுக்குரிய ஒழுங்குகள் முழுமைப்படுத்தப்பட்டிருந்தன. சிங்கள மக்கள் வாழும் பகுதி ஊடாக பௌத்த அலங்காரங்களுடன் ஊர்த்தியும் சென்றிருந்தது. மேலும் குருந்தூர் மலையில் புத்தர் சிலை நிறுவும் நிகழ்வில் கலந்துகொள்ள தென்னிலங்கையிலிருந்து சொகுசுப் பேருந்தில் பிக்குகள், மக்கள் வந்திருந்தனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர் மலையில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக நூற்றுக் கணக்கான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான கி.சிவலிங்கம், இ.கவாஸ்கர், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவன் சமூகச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்கள் மக்களுடன் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்துக்கு வருகை தந்த மூவரை வழிமறித்த பொலிஸார் அவர்களைத் தாக்கி கைது செய்து, பின்னர் விடுவித்திருந்தனர்.

தொடர்ந்து குறித்த பகுதிக்கு தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க வருகைதந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் கலந்துரையாடியதுடன், குருந்தூர் மலையையும் பார்வையிட்டிருந்தார்.

அதன்போது கருத்துத் தெரிவித்த அனுரமானதுங்க,

குருந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல் ஆய்வின்மூலம் கிடைத்த எச்சங்களை பேணிப் பாதுகாப்பதற்காக புனர்நிர்மாணம் செய்யும் வேலைகளையே தாம் முன்னெடுப்பதாகவும், அங்கு புதிதாக கட்டடங்கள் எதனையும் கட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமது திணைக்களத்துக்கும், பிக்குகளுக்கும் இராணுவத்துக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை எனவும் தெரிவித்தார்.

மேலும், குருந்தூர் மலையைச்சூழ உள்ள வயல்நிலங்கள் தொல்லியல் இடமெனக்கூறி, தமிழ் மக்களை பிக்குகள் தடுப்பது தொடர்பிலும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. பிக்குகள் தடுப்பதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என அவர் அதற்குப் பதிலளித்திருந்தார்.

மேலும் குருந்தூர் மலை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மக்கள் பிரதிநிதிகள், மக்களுடன் கலந்துரையாடல் நடத்துவதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ-ஒ,246)

## எரிபொருள்...

அமைச்சின் செயலர் பத்திரண தெரிவித்துள்ளார்.

விலைச்சூத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கு அமைவாக மாதாந்தம் எரிபொருள் விலை திருத்தப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## புதிய...

றுக்கிழமை பலாலியில் உள்ள தலைமையகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இலங்கை இராணுவத்தின் மூத்த நிலை அதிகாரிகளில் ஒருவரான சந்தன விஜயசுந்தரவுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. (அ-ஒ,20)

## வீதியில்...

கொலை செய்யப்பட்ட நபர் பாலிநகர் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அழகப்பன் அமிர்தலிங்கம் (வயது- 40) எனத் தெரிய வந்துள்ளது.

பாலிநகர் பகுதியில் இடம்பெற்ற பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு விட்டு குறித்த நபர் திரும்பிய வேளையே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## வவுனியாவில்...



சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வவுனியா நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக , வாயில் குருதி வெளியேறிய நிலையில், அடி காயங்களுடன் சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்த பொது மக்கள் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். சடலமாக மீட்கப்பட்டவரை கொலையாளி கொட்டனால் தாக்கும் காட்சி சி.சி.ரி.வியில் பதிவாகியிருந்த து. அதனடிப்படையில் சந்தேக நபரை பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்தனர். (அ-ஒ-18,110)

## வாழைத்தோட்டத்தில்..

போதை மருந்தை ஊசி மூலம் ஏற்றியமையால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

அவருடன் வாழைத்தோட்டத்துக்குள் மேலும் 4 பேர் இருந்துள்ளனர் என்று தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் ,அவர்களைத் தேடி வருவதாகவும் கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ஒ-125)

## கைவிடப்பட்ட...

தெரிவித்துள்ளார். இதற்காக குறித்த காணிகளை 5 வருடங்களுக்கு சுவீகரித்து பொறுப்பேற்பதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாய அமைச்சில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்தில் இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கமநல சேவை திணைக்களத்தால் விவசாய காணிகள் இனங்காணப்பட்டு, பயிரிட விரும்புபவர்களுக்கு அதனை கையளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாடளாவிய ரீதியில், சுமார் ஒரு இலட்சம் ஹெக்ரேயர் தரிசு நிலங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 50 ஆயிரம் ஹெக்ரேயர் காணிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமானதாகக் காணப்படுவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## வாள்முனையில்...

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த வீட்டில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை வேளை முகங்களை மறைத்தவாறு, வாள்களுடன் வீட்டை உடைத்து கொள்ளைக் கும்பல் உள்நுழைந்தது. வீட்டில் இருந்தவர்கள் சத்தம் எழுப்பவே, அவர்களை வாள்களால் வெட்டி அச்சுறுத்தியுள்ளது.

வீட்டிலிருந்த பத்தரை பவுண் நகைகளை கொள்ளையடித்துவிட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

வீட்டிலிருந்த சி.சி.ரி.வி. கமராக்களையும் கொள்ளையர் கும்பல் அடித்து உடைத்துள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ஒ-26)

## பேரழிவின்...

பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'குவாட்' அமைப்பு இலங்கை மீது அதீத கவனம் செலுத்த வேண்டும்- இவ்வாறு அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் ரொபட் மெனெண்டஸ், குவாட் அமைப்பின் அங்கத்துவ நாடுகளான அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா மற்றும் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் பென்னி வொங் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அந்தக்கடிதத்தில் - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரின்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்த அறிக்கையை வெளியிடும்போது குவாட் அமைப்பின் நான்கு அங்கத்துவ நாடுகளும் பேரவையில் ஏகோபித்து நிற்க வேண்டும் -என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டியில் புனித சவேரியார் முதலிடம்



மன்னார், ஜுன் 13

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை 2022 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மன்னார் வலயக்கல்விப் பணி மனைக்குட்பட்ட பாடசாலைகளுக்கான 2022 ஆம் ஆண்டு வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி முருங்கன் மைதானத்தில் கடந்த இரு தினங்கள் இடம்பெற்றது.

அதில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் 14 முதல் இடங்களையும் 20 இரண்டாம் இடங்களையும் 10 மூன்றாம் இடங்களையும் பெற்று மன்னார் வலயத்தில் 153 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றனர்.

இரண்டாம் இடத்தை 85 புள்ளிகளுடன் வங்காலை சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை 78 புள்ளிகளுடன் முருங்கன் மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (எ-14)

## 10 நாள்களில் 31 ஆயிரம் பாஸ்போர்ட்

கொழும்பு, ஜுன் 13

கடந்த 10 நாள்களில் 31 ஆயிரத்து 725 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், ஆனால், கடந்த 10 நாள்களில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் சராசரி எண்ணிக்கை 10 ஆயிரம் என்றும் குடிவரவு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர், ஊடகப் பேச்சாளர் பியூமி பண்டார தெரிவித்துள்ளார். (எ-இ)

## கலால் திணைக்களம் மீது பண மோசடிக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 13

இலங்கை கலால் திணைக்களத்துக்கு எதிராக, பண மோசடிக் குற்றச்சாட்டை இலங்கை மதுபான அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் சங்கம் முன்வைத்துள்ளது.

நேற்றுக் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் தலைவர் கே.டி.பி. பெர்னாண்டோ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கலால் திணைக்கள அதிகாரிகளின் மோசடிகளால் நாளாந்தம் சுமார் 400 மில்லியன் ரூபா அளவிலான இழப்பு அரசாங்கத்துக்கு ஏற்படுகின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-14,இ)

## ரஷ்யப் பெண் துஷ்பிரயோகம் சந்தேகநபர் நேற்றுக் கைது



கொழும்பு, ஜுன் 13

ரஷ்யப்பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கலினா கஸ்னெல்சன் என்ற 36 வயதுடைய பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த ரஷ்யப் பெண் கடற்கரைக்கு அருகில் உடற்பயிற்சி செய்யச் சென்ற போது, சந்தேகநபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சந்தேகநபர் வஸ்கடுவபனாபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய திருமணமானவராவார் என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (எ-இ)

## கொக்குவிலில் 4ஆவது தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜுன் 13

கொரோனாப் பெருந் தொற்றுத் தடுப்பூசியின் மூன்றாவது மற்றும் நான்காவது தடுப்பூசி ஏற்றல் இன்று திங்கட்கிழமை, காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது என நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று மூன்று மாத காலத்தைப் பூர்த்தி செய்தவர்கள் மூன்றாவதாக பைஸர் தடுப்பூசியையும், மூன்றாவதாக பைசர் தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதத்தின் பின்னர் நான்காவதாக பைஸர் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தடுப்பூசியைப் பெற விரும்புபவர்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவர்களாயினும் தமது தடுப்பூசி அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் கொக்குவில் கிழக்கு சம்பியன் ஒழுங்கையிலுள்ள வளர்மதி சனசமூக நிலையத்துக்கு இன்று காலை வருமாறும் நல்லூர் பிரதேச மருத்துவ அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமாரன் அறிவித்துள்ளார்.

இதேநேரம், குறிப்பிட்ட சில நாடுகளுக்கான உள்நுழைவுத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக அவசரமாக பைஸர் தடுப்பூசியைப் பெற விரும்புபவர்கள் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்ற நாளில் இருந்து ஒரு மாதத்தின் பின்னர் நான்காவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், அவ்வாறானவர்கள் நல்லூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## சோனியா காந்தி மருத்துவமனையில்

புதுடில்லி, ஜுன் 13

அகில இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சோனியா காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சோனியா காந்திக்கு கொவிட் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து மருத்துவர்களின் அறிவுறுத்தலின் படி அவர் தன்னை வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டிருந்தார். எனினும், உடல்நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அவர் டில்லியில் உள்ள கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சோனியா காந்தி தொடர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் என அவரது உறவினர்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ-இ)

## பொசனை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

பொசன் பண்டிகையை முன்னிட்டு அநுராதபுரத்துக்கு 9 விசேட சேவைகளை நடத்த ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்தப் ரயில் சேவைகள் நடைபெறும் என்று புகையிரத பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். அதிகாலை 12.40 மற்றும் இரவு 9.00 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து அநுராதபுரத்துக்கு இரண்டு விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன. இன்று அதிகாலை 3.30, மதியம் 12.40, மாலை 04.40, மாலை 6 மற்றும் இரவு 9 மணிக்குக்கும் விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் பயணி களின் வருகைக்கு ஏற்ப அநுராத புரத்திலிருந்து கொழும்பு கோட்டை வரை விசேட ரயில் சேவைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய)

வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிகநிலையத்திற்கு Computer Billing செய்வதற்கு ஆண், பெண் வேலையாள்களும் தங்கி நின்று வேலைசெய்வதற்கு ஆண வேலையாள்களும் தேவை.

077 419 5015

மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 ல் பிறந்த பூராடம் (4ம் பாதம்) நட்சத்திரம், கிரகபாவம் 33. 7ல் செவ்வாய் உடைய அரச உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு:- 077 696 4559

மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற 1976ல் பிறந்த விவாகரத்துப் பெற்ற இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எஞ்சினியர் மணமகனுக்கு பெற்றோர் உள்நாட்டு / வெளிநாட்டு அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு மூன்றாம் இடத்தில் சூரியன், செவ்வாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு:- 077 2659 883, 077 9530 606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.